
www.tamilarangam.net

# மனிதம்

⑦ செப். ஒக் 90




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அகதிகள்

கண் காணாத தூரத்திலே
கடும் குளிரிலே
அகதி எனும் பேரிலே
அரை அரசியல் உணர்வுடன்
காலத்தைக் கழிக்கும்
காளையர் நாம்
உற்றார் உறவினரை விட்டு
ஊர் மண்ணை விட்டு
சுவிஸ் நாடு வந்தோம்
சிலையாக பணம் தேடியும்
சுகங்கள் பல இருந்தும்
பிறந்த மண்ணில் வாழ
பிரச்சினைகள் நம்மை விடவில்லை
பிரிந்து வந்தோம்
நாம் பிறந்த மண்ணை....

| கனைவையூர்-பேண்.வே |

## கவிதைத் தொகுப்பு வெளியீடு.

வளர்ந்து வரும் படைப்பாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் நோக்குடன் கவிதைத் தொகுப்பொன்றை வெளியிட இருக்கின்றோம்.

உங்கள் கவிதைப் படைப்புகளை டிசெம்பர் 31க்குள் எதிர்பார்க்கின்றோம். மனிதம் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

-மனிதம் குழு-

www.tamilarangam.net

# மனிதம்!



இரவுக்கு இரவு மேஜைக் கடியில் பதுங்கிக் கிடக்கிறாய்
உனது குழந்தைகளுடன் அசைவற்று.
மெழுகுவர்த்திகூட கொளுத்த முடியாது
நிழல் அல்லது ஒரு சத்தம்கூட வீட்டோர் அனைவரையும் கொன்றுவிடு
என்ன இருக்கிறது?
நம்மிடம் மின்சாரமில்லை
நம்மிடம் பணமில்லை
பெரும்பான்மை மக்களுக்கு உணவென்பதே கிடையாது
நாம் வேலை செய்த இடங்களோ தரைமட்டமாகிவிட்டன
நம்மிடம் செயல்படும் மருத்துவமனையும் இல்லை
மருந்தில்லை, எரிபொருளில்லை .
15 வருடங்களாக யுத்தம்....

— ரஜினி திராணகமா, யாழ்ப்பாணம்.

தொடரும் யுத்தம்...

யுத்தத்தின் கரங்கள் இறுகியதால் பட்டினியில் பரிதவிக்கும் மக்கள்...

இதுவே இன்றைய நிலையாய்ப் போயுள்ளது. இந்திய ராணுவத்தின் தாக்குதலின்போது நிகழ்ந்ததை விட மிகவும் கொடூரமான யுத்தத்துடனேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்திய ராணுவம் விடுதலைப் புலிகளை பலவீனப் படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு யுத்தத்தினைப் புரிந்தது. ஆனால் இலங்கை அரசோ புலிகளை பலவீனப் படுத்துவதற்காக மட்டுமின்றி தனது இனவெறியை வெளிக் காட்டும் வகையில் யுத்தம் புரிகிறது. தமிழ் தேசிய இனத்தை அழிக்கும் வரை ஓயாமல் யுத்தம் புரிவதையே உள்நோக்கமாகக் கொண்டிருப்பதால், ஏற்படும் அழிவுகள் இழப்புகள் முன்பு நிகழ்ந்த யுத்தத்தினை விட கூடுதலாகவே உள்ளது.

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கையில் விமானம் மூலம் வீசிக் குண்டுகளைப்

www.tamilarangam.net



போதல் முக்கிய இராணுவ நடவடிக்கையாய் இம்முறை அமைந்துள்ளது. இத்தகைய இராணுவ நடவடிக்கை பல உயிர்ச் சேதங்களை ஏற்படுத்துவதுடன், பல கட்டிடங்களை தரைமட்டமாக்கி பொருளாதார ரீதியிலும் மீள முடியாத அளவுக்கு அட்டூழியம் புரிகிறது. இலங்கை இராணுவத்தின் தாக்குதல் ஒரு புறமும், பட்டினிச் சாவு மறுபுறமுமாய் தமிழ் மக்கள் இதிலிருந்து மீளவே முடியாத நிலைமைக்கு சென்றுகொண்டிருக்கிறார்கள். கொடூரமான யுத்தத்தால் அல்லது பட்டினிச் சாவால் ஏதோ ஒன்றுக்கு நாம் இரையாகி விடுவோம் என்ற ஏக்கம் மக்களை பிடித்துள்ளது. இந்த யுத்தம் தொடர்ந்து நிகழ்வதற்கான சாத்தியப் பாட்டையே கொண்டுள்ளதால் அழிவுகளும் உயிர்ச் சேதங்களும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறது.

இலங்கை அரசு தயங்காமல் இத்தகைய கொடூர யுத்தத்தைப் புரிந்து கொண்டிருப்பதற்கு மற்றுமொரு காரணம், இன்று சர்வதேச ரீதியில் நிலைமை அதற்குச் சாதகமாக உள்ளமையே ஆகும். இலங்கை அரசை யுத்த நிறுத்தம் செய்யும்படி நிர்ப்பந்திப்பதற்கு சர்வதேச ரீதியாய் தமிழ் மக்களுக்கு சார்பாக இம்முறை நிலைமை இல்லாமல் போனதற்கு, இலங்கை அரசின் பிரச்சாரம் மட்டுமல்லாமல் விடுதலைப் புலிகளின் தவறான அணுகுமுறையும் காரணமாக கருதப்படுகிறது. முஸ்லிம் மக்களின் படுகொலைகளைத் தொடர்ந்து இதுவரை காலமும் சர்வதேச ரீதியாக ஒரு ஒடுக்கப்படும் தேசிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனமாகக் கருதப்பட்ட தமிழினம் இன்று ஒரு ஒடுக்-
கும் தேசிய இனமாகவும் பார்க்கப் படுகிறது. இதனால்
அது உலகளவில் கிடைத்துவந்த தார்மீக ஆதரவை
இழந்துள்ளது.

புலிகள் இந்த யுத்தத்தை தொடங்கிய கால கட்டங்களில் இலங்கை அரசு தமிழர் பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாய் காட்டிக் கொண்டது. அதற்காக சில விட்டுக் கொடுப்புகளையும் செய்யத் தயார் என்ற விதத்திலேயே நடந்து கொண்டது. அதே சமயம் புலி-கள் என்ன கோரிக்கைகளை முன்வைத்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள் என்பது முழுமையாகத் தெரியாத நிலைமையில், மீண்டும் இலங்கை அரசுடன் யுத்தத்தைத் தொடங்கியபோது “ஏன், புலிகள் திடீர் யுத்த-த்தை தொடங்கினார்கள்?” என்ற கேள்வி சர்வதேச ரீதியில் மட்டுமன்றி தமிழ் மக்களிடையேயும் எழுப் பப்பட்ட ஒன்றாகும்.

“புலிகள் பேச்சுவார்த்தையில் நாட்டம் இல்லாதவர்கள்” «கொடூர மனோபாவம் உடையவர்கள்» என்ற இலங்கை அரசின் பிரச்சாரத்தை உண்மையாக்-கும் விதத்தில், «ஆரம்பத்தில் கைது செய்யப்பட்ட ஐநூறு பொலிசாரும் உயிருடன் உள்ளார்களா? அவர்களுக்கு என்ன நடந்தது?» என்ற கேள்வியும் முஸ்லிம் மக்கள் மீது நடைபெற்ற கொடூரமான தாக்குதலில் புலிகள் கலந்து கொண்டது பற்றிய தகவல்களும் வெளியாகியுள்ளன. புலிகளின் இந்தவகை அணுகுமுறைகள் இலங்கை அரசுக்கு சர்வதேச ரீதியாக

www.tamilarangam.net



சாதகமான நிலைமைகளையே தோற்றுவித்துள்ளன. இப் படுகொலைகள் எப் பகுதியினால் நிகழ்த்தப்பட்டிருப்பினும் அது தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பின்னடைவுக்கு உள்ளாக்கியிருக்கிறது என்பதே உண்மையாகும். காத்தான்குடி, ஏறாவூர் படுகொலைகளின் கொடூரம் ஆனது முஸ்லிம் மக்கள் நீண்ட கால நோக்கில் தமிழ் மக்களுடன் இணைந்து இலங்கை அரசுக்கெதிரான போராட்டத்தில் பங்கேற்பர் என்பதை ஐயத்துக்கு இடமாக்கியுள்ளது. ஏற்கனவே இடம்பெற்ற தமிழ்-முஸ்லிம் கலவரங்களால் இரு இனங்களுக்கு இடையிலும் இடைவெளி கூடியிருந்தது. இந்நிலையில் பின்னர் நடந்து முடிந்த படுகொலைகளும், குறுந்தேசியவாத இனவாத கண்ணோட்டமுடைய ஒரு பகுதித் தமிழர் இவற்றை நியாயப்படுத்தக் கிளம்புவதும் 'தமிழர்கள் தங்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கக் கூடியவர்கள்' என்ற முஸ்லீம் மக்களின் சந்தேகத்துக்கு உரமூட்டுவனவாகவே முடியும்.

முன்பு நிகழ்ந்த மோதல்களின் மறைவில் சில தீய சக்திகள் தூண்டுதலாய் இருந்தபோதும் வதந்திகளுக்கும் ஆத்திர உணர்வுக்கும் ஆளான மக்களால் அவை நடைபெற்றன. இதன் காரணத்தால் அது ஏற்படுத்திய தாக்கம் குறைவாகவே இருந்தது. ஆனால் தற்போது இடம்பெற்ற படுகொலைகள் திட்டமிட்ட முறையில் ஒரு இனத்துக்கு எதிராக நடைபெற்றமை பாரிய

www.tamilarangam.net



தாக்கத்தையே ஏற்படுத்தியுள்ளது. இந்தப் படுகொலைகளை தமிழ் இயக்கமே நடத்தியதாக முஸ்லிம் மக்கள் நம்புவதாலும், நிராயுதபாணியாய் நிற்பதால் தமது இருப்புக்கே ஆபத்து உருவாகலாம் என நம்புவதாலும் அரசின் பக்கம் சார்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அரசின் ஊர்காவல் படையிலும் இணைந்து வருகின்றனர். இவ்வாறு ஊர்காவல் படையில் சேர்பவர்கள் பெரும்பாலும் வறிய மக்கள் என்பது கவலை தரும் விடயமாகும்.

இந்திய அரசை தமிழர் பிரச்சினையில் தலையிடுமாறு புலிகள் சார்பில் கிட்டு, பாலசிங்கம் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்திய அரசுக்கும் தமக்கும் முரண்பாடு இல்லை என்ற தொனியிலும் ராஜீவ் காந்திக்கும் தமக்குமே முரண்பாடு இருந்ததாகவும் காட்ட முற்படுகின்றனர். இதன்மூலம் இந்திய அரசிடம் தமிழர் பிரச்சினையில் தலையிடுமாறு கோருவது சரியே என்ற தன்மையை உருவாக்க முனைவதாகத் தெரிகிறது. ஏற்கனவே எமது மக்களைக் கொன்று குவித்த இந்திய அரசிடம் தமிழர் பிரச்சினையில் தலையிடுமாறு கோருவது கையாலாகாத தன்மையையே காட்டுகிறது. இந் நடவடிக்கையை ராஜதந்திர நடவடிக்கை என எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

இதேசமயம் இந்திய அரசானது தனக்கு முன்னர் ஏற்பட்ட அவப்பெயர் காரணமாகவும், இந்திய மக்களிடையே தனக்குச் சார்பான கருத்தியல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தளம் இன்மையாலும், ஆளும் கட்சியின் உள்நெருக்கடியாலும், உள்நாட்டு நெருக்கடி போன்ற இன்ன பிறவற்றாலும் இராணுவ ரீதியிலான தலையீடு ஒன்றை செய்ய தயங்கலாம். ஆயினும் இலங்கையை தனது சார்பு நாடாக தொடர்ந்து வைத்திருக்கவே முயலும். இது நிகழாத பட்சத்தில் இராணுவ ரீதியிலான தலையீடு ஒன்றை செய்யலாம்; அல்லது இயக்கங்களுக்கு ஆயுத உதவி கொடுத்து தமிழர் பிரச்சினையில் அக்கறை செலுத்துவதுபோல் காட்டிக் கொண்டு தனது நோக்கத்தினை சாதிக்கும். இந்திய அரசு தனது நோக்கத்திற்கு ஏற்பவே தமிழர் பிரச்சினையில் தலையிடும் என்பதனை தெரிந்துகொண்டும் இந்திய அரசை 'பயன்படுத்த' முயல்வது அபாயகரமானது.

இன்று எமது போராட்டம் பல பின்னடைவுகளை அடைந்திருக்கும் இக் காலகட்டத்தில் மக்கள் மூச்சுவிடுவதற்கு ஓர் அமைதியான சூழ்நிலையை விரும்புகின்றனர். மீண்டும் ஒருமுறை பேச்சுவார்த்தை, யுத்த நிறுத்தம் வராதா! என்ற ஏக்கத்துடனேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அட்டைப்பட ஓவியம் : ஜீவன் (பிரான்ஸ்)

www.tamilarangam.net



# உங்கள் பக்கம்

வாசகர்களே !

'மனிதம்' ஆறாவது இதழுடன் ஓராண்டு பூர்த்தியடைகிறது. உங்கள் ஆக்கங்கள், விமர்சனங்கள் எம்மை மேலும் ஊக்குவிக்கின்றன. இந்நிலையில் 'மனிதம் குழுவினர்', 'மனிதக்காரர்கள்' என்ற பெயரில் எம்மைப்பற்றி, எமது நிலைப்பாடுகள் பற்றி வெளியில் பேசப்படுகின்ற தப்பபிப்பிராயங்களை தெளியவைப்பதற்காக இப்பகுதியில் உங்களை நாம் சந்திக்கின்றோம்.

'மனிதக்காரர்கள்' எனப்படும் நாம் யார்? எமது செயற்பாடுகள் என்ன?

"எமது தேசத்தில் நிகழும் எல்லாவிதமான அவலங்களிலிருந்தும் தப்பித்துக் கொண்டவர்கள் தானே நாம் எல்லோரும்," அரசியல் தஞ்சம் கோரி இந்த நாட்டினுள் நுழைந்து அகதிகள் முகாம்களில் அடைபட்டுக்கிடந்தோம். பின்னர் வேலைவாய்ப்புக்களின் காரணமாக மலைச்சிகரங்களுக்கும் குன்றுகளுக்குமாக சிதறிப்போனோம். தனிமையின் பிடியில் எங்கள் கடந்தகால, நிகழ்கால வாழ்வுகள் எம்முள் உரசிப்பார்த்தன. இங்கத்தைய வாழ்நிலையும், தமிழ் மக்களின் வாழ்வில் நடைமுறையில் ஏற்படும் மாற்றங்களும் ஒருவித விரக்தியையும், வேதனையையும் சுமக்க வைத்தன. இதன் தாக்கம் எமது நாட்டையும், எமது சமூகத்தையும் பற்றிச் சிந்திக்க வைத்தன. சிந்தனையின் ஓட்டத்தில் ஒரு சில நண்பர்கள் ஒன்று கூடினோம். எமது தேசத்தினதும், மக்களினதும் விடுதலையின் பாதையை முன்னோக்கி செலுத்தக்கூடிய, எமது சமூகத்திற்கு தேவையான நல்ல கருத்துக்களை தரத் தொடங்கினோம். சமூகப்பொறுப்புக்களை உணர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆரம்பித்தோம்! அரசியல் விழிப்புணர்ச்சியின் அவசியத்தை உணர்ந்தோம். இதன் வெளிப்பாடே 'மனிதம்' பத்திரிகை.

இந்த முறையுடன் கூடவே இயக்கங்களுக்கு இருக்கவேண்டிய சமூகப் பொறுப்புணர்வை சுட்டிக்காட்டுகிறோம்.

ஜனநாயகம் என்று போற்றப்படும் அத்தனை உரிமைகளும், செயல்பாடுகளும் நசுக்கப்பட்ட நிலையில் இன்று எமது மண்.

இயக்கங்களுக்கு தினை அமைத்துச் செயற்படுவதுதான் ஐரோப்பாவில் வாழும் தமிழ் மக்களுக்கு இருக்கும் ஒரே ஒரு கடமை என்று கருதும் ஒரு சில மக்கள்.

இவர்களுக்கு மத்தியில் எமது பத்திரிகை வெளியிடும் செயற்பாடானது எம்மை ஓர் இயக்கம் என்று கருத அல்லது முத்திரை குத்தும் நிலைக்கு கொண்டுபோய் விடுகிறது.

ஆனால் உண்மை என்ன?

தினம் தினம் அல்லலுறும் எம் மண்ணின் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு எமது தேசத்தில் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்பது தெளிவானது. இது எமக்கு மட்டுமன்றி ஏனையோருக்குமான ஓர் யதார்த்த உண்மையும் கூட. ஆனால் அந்நிய தேசங்களில் வாழும் எம் மக்களிடம் குறிப்பாக இளைஞர்களிடம் விடுதலையின் தேவையை சமூகப் பொறுப்பை உணர்த்த முற்படுகின்றோம். அதற்காகவே எழுதுகின்றோம். எமது கருத்துக்களை நேர்மையாக எழுதுகின்றோம். அத்தோடு மட்டும் திருப்திப்படுவதற்காக அல்ல! சொந்த நிலைப்பாடுகளிலும் நாம் நேர்மையுடனும், உறுதியுடனும் முன்னேற வேண்டும் என்பதற்காக. இல்லையேல் உண்மை எழுத்துக்கள் வெற்றுக்காகிதத்தை மட்டும் நிரப்புவதுடன் நின்றுவிடும்.

மேலும் வரட்டுக் கொள்கையாளர்கள், நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்களைப் பரப்புபவர்கள், சமூகத்தில் இருந்து அந்நியப்படுப

www.tamilarangam.net



வர்கள். சுருங்கக் கூறின் "தரைக்கும், வானத்திற்கும் இடையிலான புள்ளிக் கோட்டில் நடக்க முற்படுபவர்கள்" இப்படியாக எம்மைப் பற்றி வெளியில் பேசப்படுவதை நாம் அறிகிறோம்.

நாம் ஒன்று கூடிய ஆரம்பத்தில் இது நிகழ்ந்தது. சுமார் இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பாக, நாம் சமூகத்தைப் பற்றி, சமூக நடைமுறைகள் பற்றி தெளிவற்ற நிலையில் சமூகத்தை வெறித்துப் பார்த்தோம். அரசியலுடன், நடைமுறைச் சிக்கல்களை உணரும் அறிவு குன்றிய நிலையில் அனுபவச் செல்வங்களை தொகுக்க தவறினோம்.

உள்ளத் தூய்மையுடன் கூடிய எமது உணர்வுகள் பேசின. சரியானவற்றுடன் கூடவே குறைப்பார்வைகளும், அதிதீவிரவாத நிலைப்பாடுகளும் தோற்றம் பெற்றன. உண்மையில் சமூகப் பொறுப்புணர்வு கொண்டுள்ள ஒருவன் மீது அச்சமூகத்தின் அவலநிலையின் தாக்கம் இருக்கவே செய்யும். அவன் தன் சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கிறான். அங்கு யுத்தம் நடக்கும் போது மட்டும் செய்தியறியும் ஆர்வமாக அது குறுகி விடுவதில்லை. யுத்த கொடுங்கரங்களின் கீழ் எமது மக்கள் அல்லல்பட்டுச் சிதறி ஓடும் அவலங்களும், பாசிசத்தின் பயங்கரங்களில் மிரண்டுபோய் வாழ்வதையும், இங்கிருக்கும் ஒருவனால் உள்ளபடி உணரமுடியாது தான். ஆனால் அவனிடம் சமூகப் பொறுப்பு உணரப்படும் போது மக்களின் உணர்வுகளையும் வெவ்வேறு அளவுகளில் உணரமுடிகிறது. இது யதார்த்தம்! எம் நிலையும் இதுவே! எனவே தான் எமது சொந்த வாழ்க்கையில் கேளிக்கை மிகுந்த கொண்டாட்டங்களை நாம் கொண்டாடுவதை தவிர்த்து வருகின்றோம்.

இக் கொண்டாட்டங்களில் உறவினர்கள், நண்பர்கள் கூடி மகிழும் ஒரு ஒன்று கூடலாக அமைய வேண்டும் என்பதே எமது வேண்டுதலாகும்! திருமண வைபவங்களை எவ்வாறு நடத்துவது, திருமண வைபவங்களில் கலந்து கொள்வது, பிறந்தநாள் கொண்டாட்டத்தை எவ்வாறு-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


நோக்குவது? சாத்திரம், சம்பிரதாயம், முகூர்த்தம் பார்ப்பது சரியா? பிழையா? என்பது பற்றியெல்லாம் எம்மிடையே விவாதங்கள், கருத்து மோதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன- நடைபெற்றும் வருகின்றன. குறைப்பார்வைகளும்- யதார்த்தமான நடைமுறை அனுபவங்களும் சந்தித்துக் கொண்டன. ஆனால் இவை கட்டுப்பாடுகளாக திணிக்கப்படவில்லை. ஆயினும் தொடர்ந்து விவாதங்களுக்கூடாகவும் - நடைமுறை அனுபவங்களின் வளர்ச்சிப் போக்கிலும், எமது தவறுகளும் மாற்றம் பெற்றன, பெற்று வருகின்றன. அவற்றை சற்று நோக்குவோம்.

இரண்டு வருடங்களுக்கு முன்பு. அதாவது நாம் ஒன்றுகூடிய வேளையில்....

பிறந்தநாள் கொண்டாட்டங்களையே நிராகரித்தோம் அதில் நாம் கலந்து கொள்வதில்லை என்ற நிலைப்பாட்டிலேயும் இருந்தோம்.

ஆனால் விவாதங்களில் நாம் எமது மக்களின் இன்றைய வாழ்நிலையை சற்று ஆழ நோக்கினோம்.

பண்டிகைகளோ, திருவிழாக்களோ எதுவுமே அற்ற நிலையில் வாழும் எமது மக்கள்:

தமது குழந்தையின் பிறந்த நாளை கொண்டாடி மகிழ்வது மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு அம்சம் தான் என்பதை நாம் உணர்ந்தோம். ஆயினும் குழந்தைகளுக்கான பிறந்தநாள் கொண்டாட்டம் அக்குழந்தையை மகிழ்வித்து எல்லோருடனும் கூடி வாழும் மனோபக்குவத்தையும், ஆளுமையையும் உண்டு பண்ணக்கூடியதாக அமைவதே அர்த்தமுள்ளது. குழந்தையின் அமைதி, மனோபாவம், விடயங்களைக் கூர்ந்து கவனித்துக் கிரகிக்கும் தன்மைகள் போன்ற உளவியல் தன்மைகளை கவனத்தில் எடுக்க வேண்டும். மாறாக அலறல் இரைச்சலுடன் பாடல்கள், கண்களை மூடவைக்கும் அளவுக்கதிகமான படப்பிடிப்புகள் போன்ற அமைதியற்ற சூழல் எந்தளவுக்குத் தோற்றுவிக்கப்படுகின்றதோ அந்தளவுக்கு அது பெரிதாக கொண்

www.tamilarangam.net



டாடப்படுகிறது என்று நினைப்பதில் எதுவித அர்த்தமும் இல்லை என்பதைப் பெற்றோர் கவனத்தில் எடுக்கவேண்டும் என்றே நாம் விரும்புகிறோம்.

பல அம்சங்களில் வயது வந்தோருக்கான பிறந்தநாள் இங்கு கொண்டாடப்படும் நோக்கமே வேறாக இருப்பதால் அவற்றில் நாம் கலந்து கொள்வதேயில்லை.

அடுத்து திருமணவிழாவை பிறந்தநாள் கொண்டாட்டத்துடன் பலர் ஒன்றாக குழப்பிக்கொள்கின்றனர். திருமணம் வாழ்க்கையின் ஒரு திருப்புமுனை. புதிய பொறுப்புக்களை, மனிதக்கடமைகளை சுமத்தி வாழ்க்கைப் போராட்டத்தில் புதிய அத்தியாயத்தை துவக்கிவைக்கிறது. மனித குல நாகரீகத்தின் அடையாளங்களில் ஒன்று. இப்படியிருக்க திருமணம் செய்வதைக் கூட நாம் நிராகரிக்கிறோமென எம்மீது கொச்சைத்தனமாக ஒரு சிலர் அவதூறு பரப்பியுள்ளனர். திருமணம் அவசியமான ஒன்று என்பதில் மறு பேச்சுக்கே இடமில்லை. ஆனால் பெண்ணடிமைத்தனத்திலிருந்து (இயலுமானவரை) மீளவைக்கும் ஒருதிருப்புமுனையாக நாம் மாற்றியமைக்க விரும்புகிறோம். சீதனம் வாங்குவதில்லை, ஆடம்பரமாகக் கொண்டாடுவதில்லை, அன்பளிப்பு வாங்குவதில்லை என்பதில் எமக்கிடையில் உடன்பாடு உண்டு. இதைவிட இன்னும் ஒரு படி மேலே போய் பெண்களுக்கு 'வேலி'யாக தாலியைக்கட்டுவதில் - அதாவது ஆண்களுக்கு இல்லாத வேலியை பெண்ணுக்கு மட்டும் போடுவதில் - உடன்பாடு இல்லை என்று தனிப்பட்ட நிலைப்பாடுகளில் எம்மில் சிலர் உள்ளனர். இதற்கு ஓர் உயர்ந்த பக்குவமும், ஆளுமையும் தேவை. அதை அவர்களில் சிலர் சாதித்துக் காட்டியுமுள்ளனர். இந்நிலைப்பாடு மனிதம் குழுவின் நிலைப்பாடாக விபரம் புரியாதோரால் கதை பரப்பப்பட்டது. அதேபோல் எம்மில் சிலரும் மனிதம் குழுவின் நிலைப்பாடாக பொதுமைப்படுத்தும் வகையில் நடந்து கொண்டதும் எமது பக்க தவறாக அமைந்ததுண்டு. இத் தவறை நாம் ஏற்றுக்கொள்

www.tamilarangam.net



கின்றோம்.

சீதனம், எமது பெண்களை மோசமாகப் பாதிக்கின்றது. சீதனம் வாங்கும் நடைமுறை எத்தனை ஆயிரம் பெண்களின் வாழ்க்கையை இருட்டுக்குள் தள்ளி விட்டிருக்கிறது.

இதனால் சீதனம் வாங்குவதில்லை, ஆடம்பரமாக திருமணம் கொண்டாடுவதில்லை என்ற நிலைப்பாடுகள் சமூக நடைமுறைகளோடு ஒப்பிடும் போது உயர்ந்ததாகவும், பாராட்டுக்குரியதாகவும் இருப்பதில் ஐயமில்லை.

ஆனால் தாலி கட்டுவது சார்பாக எம்முள் விவாதங்கள் தொடர்ந்தும் நிகழ்கின்றன.

தாலி; இது எமது பெண்கள் சமூகத்தால் இதுவரை போற்றுதற்குரிய ஒரு அம்சமாகவே இருந்து வருகிறது. தாலியைப் பொறுத்தமட்டில் எமது பெண்கள் இன்னும் கலாச்சார சின்னமாகவே இதைக் கருதுகிறார்கள். எமது சமூக கட்டுபாடுகளும் அதற்கு மிகவும் அழுத்தம் கொடுக்கிறது. ஆகவே சீதனத்தை உடைத்தெறியும் வேகத்தில் தாலியை நிராகரிக்கமுடியாது தான்.

ஆனால் இந்த தாலி, அது போதிக்கும் தத்துவம், அதற்கு சமூகம் கொடுக்கும் மதிப்பு, முக்கியத்துவம் இவைகளை கருத்தில் எடுக்கும் போது அது எதனை சுட்டி நிற்கிறது என்பது புலப்படும். "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன்" என்று உபதேசம் செய்வதோடு, பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளை, ஆணாதிக்கத்தை, சமூகரீதியாக உறுதிப்படுத்துவது இந்த தாலி என்னும் சின்னம்.

ஆயினும் எந்தச் சின்னம் ஆணாதிக்கத்தை சமூகரீதியாக அங்கீகரித்து வைத்திருக்கிறதோ அதையே எமது பெண்கள் போற்றி வணங்குவது வேதனைப்படவேண்டிய விடயம். ஆம் நாமும் எழுதுகின்றோம், எழுதுவார்கள் செய்வார்களா? என்பர் சிலர். செய்ய முற்படுபவர்களைக் கண்டதும் வார்த்தைகளை மாற்றிக் கொள்கின்றனர். சமூகத்தில் அந்நியப்படுகிறீர்கள்,

www.tamilarangam.net



நடைமுறையில் சரிவராது என்று முட்டுக்கட்டையுடன் வருவர். உண்மையில் அடிமனதில் காலம்காலமாக ஊறிய எண்ணங்களின் மேடையில் இருந்து புதிய நடைமுறைகளை ஜீரணிக்க முடியாத (அல்லது கஷ்டமாகவுள்ள) மனோபாவமே இதற்குக் காரணமாகும்.

இன்றும் பெண்கள் நகைகள் அணிவதையும் நாமே எதிர்க்கிறோம் என்பது எம்மீது விழும் இன்னோர் தப்பபிப்பிராயம். மனிதன் அழகுணர்வு உள்ளவன். அவன் காட்டுமிராண்டியாக வரண்டவாழ்வு வாழ்வது வளர்ச்சியடைந்த மனித நாகரீகமல்ல. ஒவ்வொரு மனிதனும் தன்னை அழகுபடுத்த விரும்புகிறான். குறைந்தபட்சம் தன்னால் இயன்ற வரை மற்றவர்களின் பார்வைக்கு அருவருப்பு ஊட்டாத வகையில் தன்னை வைத்திருக்க விரும்புகிறான். இது மனித நாகரீகம். அதே நேரம் ஆடம்பரத்தை அழகுணர்ச்சியாக காட்டும் பிழையான மனோபாவம் சிலரிடமுள்ளது. பகட்டாக, அளவுக்கதிகமாக நகைகளால் அலங்கரித்து பெண்களை ரசனைக்குரிய ஒரு பண்டமாக மாற்றுவதை அழகுணர்வாக நாம் பார்க்கவில்லை. குறைந்தளவில் தன்னை அவள் அழகாக வைத்திருப்பதில் அவளின் நாட்டம் மனித நாகரீகத்திற்குட்பட்டதே! இதே போன்று ஒரு ஆணும் இருக்க முடியும். எமது சமூகத்தில் பெண்களை நகைகளால் அலங்கரித்துப் பார்க்கும் வழக்கமானது, சீதனம் கேட்கும் போது இவ்வளவு பவுண் நகை போடவேண்டும் என்று வழக்கமாகி, பெண்களின் திருமண வாழ்க்கையே கேள்விக்குறியாகியுள்ளதை கருத்தில் கொள்ள வேண்டும். இதே போலவே பெண்களைப் பொறுத்தவரை சீதனம் கொடாமல் திருமணம் நிறைவேறாது என்ற நிலை சமூக நடைமுறையாக இன்னும் நிலவுகிறது. ஆண் ஆதிக்கம் மேலோங்கி நிற்கும் நிலையில் பெண்களுக்கென்றே பலம் பொருந்திய அமைப்புகள் இல்லாத அல்லது கட்ட முடியாத நிலையில் ஆண்களால் முடிவதைப் போன்று அவர்கள் சீதனம் கொடாமல்தான் செய்வேன் என்ற நிலைப்பாட்டை உதிரக

www.tamilarangam.net



ளாக நின்று எடுக்கமுடியாத கையறு நிலையில் உள்ளனர். அத்தோடு திருமணம் செய்யாமல் எமது சமூகத்தில் ஒரு பெண் வாழ்வது என்பது - ஆண்களைப் போலன்றி - மிகவும் கடினமானதும், சித்திரவதை போன்றதுமாகும். இதனாலேயே எமது சகோதரிகளுக்கு சீதனம் கொடுத்து செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளோம். 'தகுதிக்கேற்ற' மாப்பிள்ளை பார்ப்பதைக்குறைத்து குறைந்தபட்ச சீதனத்துடன் செய்துவைக்க முயற்சிக்க வேண்டும் என்பதுதான் இப்போதைக்கு எமது பக்கத்தில் மனம் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.

மேலும் திருமண அழைப்பிதழ் (CARD) அடிப்பது, வீடியோ படம் எடுப்பது சம்பந்தமாகவும் எமக்குள் கட்டுப்பாடுகள் இருப்பதாக சிலர் கருதுகின்றனர். இன்றைய வாழ்வு நிலை, தொடர்புமுறை என்பவற்றை கவனத்தில் கொள்ளும் போது நண்பர்கள், உறவினர்களுக்கு தெரிவிக்க அழைப்புமடல் அடிப்பது தேவையாகிறது. இதே போன்றே எமது சமூக உறவுகளை கவனத்தில் கொண்டால் தமது திருமணநாளை, குழந்தையின் பிறந்தநாளை ஊரில் பெற்றோர் உறவினர் பார்த்து உவகையுறும் நோக்குடன், வீடியோ படம் எடுப்பதும் கூட தேவையான அம்சமாக மாறிவிட்டதால் இது சம்பந்தமாக எமக்கும் ஆட்சேபனை இருக்கவில்லை. ஆயினும் வீடியோ போன்ற தொழில் நுட்ப கருவிகளை கலியாணவீடுகளுக்கும், திருவிழாக்களுக்கும் பயன்படுத்துவதோடு மட்டும் நின்றுவிடாமல் இன்னும் சமூகத்திற்கு தேவையான துறைகளில் பயன்படுத்த முடியும் என்பதும் எமது தெளிவான கருத்தாகும்.

எம்மைப்பற்றி, எமது நிலைப்பாடுகள் பற்றி நாம் முகம் கொடுத்த, எமது காதுக்கெட்டிய தப்பபிப்பிராயங்களை புரியவைக்க முயற்சித்துள்ளோம். இந்த நிலைப்பாடுகள் எமது சமூக நிலைமைக்குள் நின்று உழலுவோருக்கு எடுத்தெடுப்பில் ஜீரணிக்க கஷ்டமாக இருக்கலாம்.

(தொடர்ச்சி 21 ம் பக்கம்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொப்மாலியும்

# றேகே இசையும்




இக்கட்டுரையின் நோக்கம் பொப்மாலியின் சொந்த வாழ்க்கை வரலாற்றை மட்டும் பார்ப்பதல்ல.

றேக்கே இசையின் தோற்றம் அப்படி ஒரு இசை எழுந்ததற்கான அன்றைய ஜமேக்காவின் அரசியல் சூழ்நிலைகள்- அது தன் ஜமேக்காவின் மக்களின் அவலங்களைப் பாடும் ஒன்றாய் அமைந்தது- றேக்கே இசை எப்படிப் பிரபல்யம் அடைந்தது பின் அந்த றேக்கே இசையை மழுங்கடிப்பதற்கு- மக்களின் மனங்களில் இருந்து விடுபடச் செய்வதற்கு ஏகாதிபத்திய தரகு கம்பனிகள் செய்த சதிகள் - றேகேயின் புகழுக்கு காரணமாய் அமைந்தவர்களில் ஒருவரான பொப்மாலி - இவை பற்றி பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

"றேக்கே ஜமேக்காவின் புரட்சி இசைவடிவம்" என்ற தலைப்பில், A·W·T·Wக்கு அமெரிக்க புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தவரும், கலாச்சாரத்துறை அறிஞருமான ரீற்றா பொறுஸ் என்பவரால் 1982ம் ஆண்டு எழுதப்பட்ட இக்கட்டுரை இங்கு மறு பிரசுரம் செய்யப்படுகிறது.

www.tamilarangam.net


'காசா எல் கீபர்' - இலண்டனும், பாரிசும் சேரும் சகதியுமானதுக் கிராமங்களாக இருக்கும் போதே குடிநீர் வசதியும், தெருவிளக்குகளைக் கொண்ட நகரமாக விளங்கியது. மொரோக்கோவின் வடபகுதியில் அமை ந்திருந்த இந்த நகரச் சந்தையொன்றில் காய்கறி வாங்கிக் கொண்டிருந் தேன். அன்று தான் 'பொப்மாலி' இறந்தநாள்.

மொரோக்கோவின் இளைஞர்கள் - 'உம் கல்தோம்' என்ற காலஞ்சென் -ற பாடகியின் இசையை, இல்லாவிடில், 'கைரோ', 'பெய்ரூட்' நகர பொப்பிசை கலைஞர்களின் பாடல்களை மட்டுமே கேட்டுப் பழகியவர்கள். வேறைத் தேய எந்த இசை வடிவங்களிலும் நாட்டம் கொள்ளாதவர்கள். ஆனால் இவர் கள் ஜமேக்காகாரரான பொப்மாலியையும் அவருடைய பாடல்களையும் 'காதலித்தார்கள்' என்று சொன்னால் அது மிகையானதல்ல. அராபிய இசை வடிவமல்லாத வேறொரு இசையை மொரோக்கோ நாட்டினர் விரும்பினார் என்றால் அது பொப்மாலியினுடையதாகவே இருக்கும். காசா எல் கீபரின் பிரதான வீதியெங்கும் அன்று பொப்மாலியின் உருவம் தாங்கிய சுவரொட்டி கள், பேனர்ஸ் (banners) எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. நகரெங்கும் சோகமயமாக காட்சியளித்தது.

## றேக்கே இசையின் தோற்றம்

மாலியின் இசை பாலைவனக்குக்கிராமங்களில் ஊடுரு வியது; அவுஸ்ரேலியாவின் ஆதிக்குடிகளால் இசைக்கப்படுவது; அய்ரோப்பாவின் சிறந்த பத்துப்பாடல்கள் வரிசைகளில் இடம்பிடித்தது. உலகின் இசைத்துறை யிலெல்லாம் தன் பாதிப்பை பதித்தது. மிக மிக அரிதாக 'பஞ்சாபியில் இயங் கும் பேய்ஸ்க்கட்டர்களில் கூட உலகின் பல குக்கிராமங்களிலிசைக்கப்படும் றேக்கே இசைக்கு வயது இருபதுதான். றேக்கேயின் தோற்று நாடான கரபியன் தீவான 'ஜமேக்கா' - வடஆபிரிக்காவினதும், வடஅமெரிக்காவினதும் வேறு பட்ட இருகலாச்சாரங்களின் இணைப்பைக் கொண்டது. றேக்கே இசையின் தோற்றுனர்களான எஸ்கா (ska)வும், றொக்ஸ்ரெடி (Rocksteady)யும்,

www.tamilarangam.net


1960ம் ஆண்டின் நடுப்பகுதியில் ஜமைக்காவின் பசுமையான, மலைப் பாங்குகளான கிராமங்களை விட்டு கிங்ஸ்ரன் என்னும் மலைப்பாங்கான சேரி நகரத்திற்கு மக்கள் பாரியளவில் குடிபெயரும் போது றெகே இசையை மிகப் பொருத்தமான சமயத்தில் தோற்றுவித்தார்கள்.

இம்மக்கள் நூற்றாண்டு காலமான பழைய கிராமிய வாழ்க்கை முறையில் இருந்து தம்மைப்பிரித்துக்கொண்டமையால் வாழ்க்கை முறையில் பாரிய மாற்றங்களை புகுத்திக் கொண்டவர்கள். இதுவே றெக்கே இசை பிரபல்யமடைய, குறிப்பாக வயதில் வேறுபட்ட அறிவுமுதிர்ச்சியடைந்த இளைஞர்களிடையே புகழ் பெறுக்காரணமாய் இருந்தது. இந்த நகர் வாழ் மக்கள் தங்கள் புதிய சூழலில் "நாகரிக" வாழ்வின் அவலங்களைப்பற்றி ஓர் உண்மையான விமர்சனக் கண்ணோட்டத்துடனான ஆய்வாக இவ்விசையை கொள்ளலாம்.

Burning and a Looting to night
Burning all Pollution to night
Burning all illusion to night
Burning and Looting the walers

[இன்றிரவு எங்கள் பொய்யான கனவுகளைச் சுட்டெரிப்போம். எங்கள் கலாச்சாரத்தில் கலந்துவிட்ட குப்பைகளைக் களைவோம்]

அமெரிக்காவின் றொக்கன் றோல் (Rockon Roll) இசை ஏற்படுத்திய தாக்கத்தைப் போலவே உலகெங்கிலும் றெக்கே இசை தனக்கென பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு குறிப்பிட்ட நகரத்தின் தலைவருமானத்தில் முதலாவது இடத்தைப் பெற்றது மாத்திரமல்லாமல், கிங்ஸ்ரன் நகரம் உலகெங்கும் இசைக்கும் முழு றெக்கே இசையையும் தன்னகத்தே உற்பத்தி செய்து கொண்டது.

ஜமைக்கா - அதன் சூழல் - றெக்கே இசையின் தோற்றத்திற்கான காரணிகள் என்ன?

'The hoorders they com' என்று மைக்கல் தால்வெல்லின் நாவலில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவான் (Ivan) என்ற கிங்ஸ்ரன் நகரத்து இளைஞன் (இவன் ஒரு முரட்டுத்தனமிருந்த சேரிப் பையன்; ஜமேக்காவின் இசைத்துறையுடன் சம்பந்தப்பட்டவன்) தனது மூதாதையர் வாழ்ந்த மலைப்பாங்கான கிராமப் புறத்திற்கு பல வருடங்கள் இடைவெளிக்குப் பின் செல்கிறான். அங்கு தனது குடும்பத்தவர்களின் தகரக் கொட்டகைகளைக் காணாது புதர்களை மாத்திரம் காண்கிறான். எங்கே அந்த தகரக்கூரையை புதர்கள் எல்லாம் வளர்ந்து மூடிவிட்டதா? என அங்கலாய்க்கிறான்

எனது சந்ததியினர் வாழ்ந்து விட்டுச் சென்ற எச்சங்கள் எங்கே? அவர்களின் உழைப்பு, பக்திக்கூர்மை, திறமை எல்லாம் எங்கே? தன்நிறைவாக வாழ்ந்த இந்த இடத்தில் இன்று ஒன்றுமேயில்லாமல் புதர்கள் மாத்திரம் தானா எஞ்சியிருக்கிறது?

அவனை வளர்த்த பாட்டி இறந்து விட்டாள். அவனது தாயோ கைக்கும், வாய்க்குமான வருமானத்தில் கிங்ஸ்ரன் நகரில் உடுப்புத்தோய்க்கும் தொழிலாளியாய் சீவிக்கிறாள். அவனது தாய் தந்தையரின் ஆண் சகோதரர்கள் உலகின் பல மூலைகளிலும் தங்கள் வாழ்வைத் தொலைத்துக் கொண்டார்கள். ஒருவன் 2ம் உலகப்போரில் பிரித்தானியருக்காக போரிட்டு மடிந்தான், இன்னொருவன் க்யூபாவுக்கு கரும்பு வெட்டும் தொழிலாளியாய் சென்றவன் என்ன ஆனானோ தெரியாது, இன்னொருவன் தன் மனைவியைக் கொன்றதற்காக கிங்ஸ்ரன் சிறையில் ஆயுள்தண்டனைக் கைதியாக, இப்படி ஏனையோரும்,......

நான் இங்கேயே தங்கி இந்த இடத்தைப் பேணினால் என்ன? இங்கு வாழும் மக்கள் நீ எங்கிருந்தோ வந்தவன் என்று கேலி செய்து என் மனதைப் புண்படுத்துகிறார்களே. நான் ஒரு கத்தி கொண்டு இந்தப் புதர்களை யெல்லாம் வெட்டி துப்பரவு செய்து யாருக்கு என்ன பிரயோசனம். நான் வெறுமையை உணர்கிறேன், தனிமையில் இருக்கின்றேன். இனி இந்த இடத்திற்கு ஒரு போதும் திரும்ப வரப்போவதில்லை என்று சிந்தித்தவனாய் தொடர்ந்து நடந்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன்னை தந்தைபோல் நேசித்து வளர்த்த மாஸ்நரயின் வீட்டிற்கு சென்றான். அங்கு வீட்டின் கொல்லைப்புறத்தை இரு அமெரிக்கர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். இருவரும் கஞ்சாவைப் புகைத்துவிட்டு நிர்வாணமாய் வெய்யில் காய்ந்து கொண்டிருந்தனர். அதிலொருவன் ஆண்ஆட்டில் பால் கறக்க முயன்று தோல்வியுற்று வெறுப்பில் தனது மோட்டார் சைக்கிளில் வந்து செம்புழுதிகளைக் கிளப்பிக் கொண்டு திரும்ஸ்ரன் நகரை நோக்கி விரைந்தான். இழப்பதற்கு தன்னிடம் எதுவுமே இல்லாதவனான-தனியனான, இவான் (Ivan) கடந்தகாலத்தைப்பற்றி எண்ணிக்கூடப் பார்க்காமல் பொலிசுக்காரன் ஒருவனைக் கொலை செய்தும், தனது இதைத்திறமையை நிலை நாட்டியும் குடிப்பதற்கு தண்ணீர் கூட கிடையாத அந்தக் காட்டில் வாழும் மக்கள் மத்தியில் பயமற்ற வீரனாகப் புகழ் பெற்றான். (தொடரும்)

---

( 16 ம் பக்கத் தொடர்ச்சி )

சமூக மாற்றத்திற்காக தன்னை அர்ப்பணிக்கும் ஒருவன் இதை வெறும் சீர்திருத்தவாத நிலைப்பாட்டின் வரையறைக்குள் காண லாம்.

ஆனால்!

எமது சமூகத்தின் வளர்ச்சினூடே கூடிய சமூக மாற்றத்தின் பரிணாமத்துடன் பிணைத்துச் செல்வதன் மூலமே மேற்படி பிரச்சனைகளை எதிர்த்து கடந்து செல்வதும், தீர்த்துக் கொள்வதுமான அம்சங்கள் முழுமை பெறமுடியும் என்பதே யதார்த்த உண்மை.

வாசகர்களே.....

எம்மைப் பற்றி இருந்த தப்பபிப்பிராயங்களை தெளியவைக்க இப் பகுதியில் முயற்சித்துள்ளோம். தொடர்ந்தும் உங்கள் மத்தியில் எழும் கேள்விகளையும், அபிப்பிராயங்களையும் எங்களுக்கு தயவு செய்து அனுப்பிவையுங்கள். கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.

- மனிதம் குழு -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறீலங்கா:

## தொடரும் மனித உரிமை மீறல்கள்



(அமனஸ்டி இன்டர்நேஷனல் அறிக்கை)

சர்வதேச மன்னிப்பு சபை 18.9.90 அன்று 'சிவிலியன்கள் மீது சிறிலங்கா அரசின் பயங்கரவாதம்' என்ற தலைப்பில் கண்டன அறிக்கை ஒன்றினை - வெளியிட்டுள்ளது அவ்வறிக்கையில் உள்ள முக்கியமான விடயங்களை கீழே தருகிறோம்

சட்டத்தரணிகள் தொழிற்சங்கவாதிகள், பத்திரிகையாளர்கள், எதிர் கட்சியினர், அரசிற்கு எதிரானவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் நேரடியாகவே கொலையாளிப் படையினர் போலாக அழித்தொழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் இப்பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைகளிற்கு ஐக்கிய தேசிய கட்சி தனது பூரண ஒத்துழைப்பை நல்கி வருகிறது. மேலும் இக்கொடூரச் செயல்களை வீடுகளிலும், பொதுத் தெருக்களிலும், சிறைச்சாலைகளிலும் பகிரங்கமாகவே செய்து வருகின்

www.tamilarangam.net



னர். 1988, 1989 களில் ஆயுதம் தாங்கிய J.V.Pயினரை அழிக்கும் நடவடிக்கையில் அரச இராணுவம் ஈடுபட்ட போது பல அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். இக்கொலைகளை இராணுவம், பொலிஸ், மற்றும் கொலையாளிப் படையினரும் செய்துள்ளனர்.

90 JUNE களில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், அரச இராணுவத்திற்கும் மூண்ட மோதலிற்கு 100 பொதுமக்கள் இலக்காகி உள்ளனர். யூன் கடைசியில் கல்முனையில் அரச படைகள் அப்பாவிப் பொதுமக்களை உயிருடன் கொளுத்தியதுடன், இப் பகுதி வைத்தியசாலையில் இருந்த நோயாளிகளையும், அகதிகளாக வெளியேறியவர்களையும் அழித்தொழித்துள்ளனர். பொதுமக்களின் மீது தனியே அரச

(தொடர்ச்சி 32 ம் பக்கம்)

## ஒவ்வொரு விடியலிலும்

குஞ்சு குஞ்சு மேகங்கள்
நெளிந்த நட்சத்திரம்
வட்டமான அம்புலியில்
அம்மா
அனேக இரவுகள்
சோறு ஊட்டியிருக்கிறாள்.
பள்ளிசென்று திரும்பி
பூவரசம் 'பீபீ'யும்
தென்னோலைத் தாளியிலும்
அம்மா அப்பா விளையாடி
மழை வரும் காலத்தில்
தெருப்பள்ளங்களில்
தோணி செய்து
விளையாடுவோம்.
கடவுளிடமிருந்து வரும்
கம்பளிப் பூச்சியை
காலால் மிதிக்காமல் நட
என்று
அம்மா அடிக்கடி தலையில்
குட்டுவாள்.

இரவு நேரத்தில்
கண்ணன் வீட்டு
விளக்குக்கம்பத்தில்வட்டமிடும்
ஈசல்களைப் பார்த்து
குதூகலித்து
மறுநாள் காலை
எனது முழங்கால் உயரத்திற்கு
சிறகையெல்லாம் உதிர்த்து
இறந்து கிடக்கும்
ஈசல்களைப் பார்க்கக்
கவலையாயிருக்கும்.
செத்த ஈசல்களைக்
கையில் அள்ளி
தம்பி தங்கையின் தலையில்
கொட்டி
விளையாடுவேன்.
இப்போதெல்லாம்
கறுத்துத் திரண்ட மேகங்களும்
நட்சத்திரங்கள் தொலைந்த
வெயிலும் மழையும் அற்ற

மந்தமாகவே
அனேக பொழுதுகள்
போகின்றன.
இரவு நேரத்தில்
ஈசல் பார்க்கப் போகிற நாங்கள்
இப்போது
அனேக விடியல்களில்...
சில கழுத்துக்கள் தெறித்த
உடல்களும்
கால்களில் தட்டுப்படுவது
வழக்கமாகிவிட்டது.
இப்போதும் அம்மா
வெளியில் போகும்போது
"பார்த்துப்போ" என்கிறாள்
எனது பக்கத்து வீட்டு
அண்ணன்மார்கள்
தொலைந்து போய் நாட்கள்
ஆகின்றன.

—விசக்தி. பிரான்ஸ்

www.tamilarangam.net



உலக நடப்பு

# *** வளைகுடா நெருக்கடியும் வல்லரசுகளின் தவிப்பும் ***



(வளைகுடா கதா நாயகனின் மூன்று வேடங்கள்)

ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதியிலிருந்து உலக நாடுகளின் கவனம் வளைகுடாவின்பக்கம் திரும்பியுள்ளது. ஈராக் குவைத் என்ற சிறிய நாட்டை ஆக்கிரமித்தமையே இதற்கு காரணமாகும். குவைத் 2.1 மில்லியன் சனத்தொகையினை கொண்டதும், 6080 சதுர மைல் பரப்பினைக் கொண்டதுமான ஓர் சிறிய நாடு. இந் நாட்டினை பெரும் படை பலத்தினைக் கொண்ட ஈராக் ஆக்கிரமித்துள்ளது. குவைத் ஈராக்கினைவிட பொருளாதார ரீதியில் மேம்பட்டது. குவைத்தின் தலா வருமானம் 11,250 டொலர்களாகும்.

ஈராக்கின் இவ் ஆக்கிரமிப்பினை ஐக்கிய நாடுகள் சபையும், ஏனைய உலக நாடுகளும் கண்டித்தன. கண்டித்தது மட்டுமல்லாமல், பொருளாதார தடையினையும் மேற்கொண்டுள்ளன. ஈராக்கின் இவ் ஆக்கிரமிப்பினை சாட்டாக வைத்து அமெரிக்கா ஆயுத தளபாடங்களையும், இராணுவ துருப்புகளையும் வளைகுடா பிரதேசத்திற்கு அனுப்பியுள்ளது. அமெரிக்கா மட்டுமல்ல ஏனைய மேற்குலக நாடுகளும் தத்தமது படைகளை வளைகுடாவிற்கு அனுப்பி வைத்துள்ளன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வாறு மேற்குலக நாடுகள் ஈராக்கின் விடயத்தில் அக்கறை செலுத்துவதன் நோக்கம் மேற்கு ஐரோப்பாவின் எண்ணெய்த் தேவையின் மூன்றில் இரண்டு பகுதியையும், ஜப்பானின் எண்ணெய்த் தேவையில் மூன்றில் இரண்டு பங்கையும் வளைகுடா நாடுகளே பூர்த்தி செய்கின்றமையாலும், குவைத்தில் அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் தமது முதலீடுகளை இட்டுள்ளமையாலேயாகும். இவற்றை காப்பாற்றுவதிலும், மீட்பதிலுமே அக்கறை செலுத்துகின்றன.

அமெரிக்கா இதுவரையிலும் தான் எதுவித ஆக்கிரமிப்பினையும் மேற்கொள்ளாதது போல் "நண்பரானாலும் எதிரியானாலும் ஆக்கிரமிப்பினை மேற்கொள்வோரை நாம் எதிர்ப்போம்" என உளறியுள்ளது. அமெரிக்கா வியட்நாமிலும், சிறிய நாடாகிய கிரனடாவிலும் மேற் கொண்ட ஆக்கிரமிப்பிற்கு வேறு அர்த்தமோ? என்று கேட்குமளவிற்கு வார்த்தைகளை அள்ளிக் கொட்டுகின்றது.

ஈரானுடனான போரில் நாட்டின் கஜானா காலியானதும், மக்களின் மத்தியில் தான் அம்பலப்படுவதற்கு முன் கஜானாவை நிரப்ப வேண்டியே பொருளாதார ரீதியில் மேம்பட்ட குவைத்தினுள் சதாம் ஆக்கிரமிப்பை மேற் கொண்டுள்ளார். குவைத்தினை ஆக்கிரமித்த ஈராக்கின் படைகள் முதலில் குவைத் மத்திய வங்கியினையே கைப்பற்றியதும், இரண்டாம் பட்சமாகவே மன்னரின் மாளிகையினை கைப்பற்றியதும் ஈராக்கின் நோக்கத்தினை தெளிவு படுத்துகின்றது. ஈராக்கிற்கும், குவைத்துக்கும் சொந்தமான எண்ணெய் வயலில் இருந்து 240 கோடி டொலர் பெறுமதியான எண்ணெயை குவைத் திருடியதாகவும், மேற்குலக நாடுகளிற்கு கூடுதலான எண்ணெயைத் கொடுப்பதாகவும், அந் நாடுகளின் ஆலோசனைக்கிணங்க எண்ணெய் விலையை அதிகரிக்க மறுப்பதால் ஈராக் மேலும் நட்டத்திற்குள்ளாவதாலேயே ஆக்கிரமிப்பை மேற் கொண்டதாகவும், மேலும் குவைத் நாட்டு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சியாளர்கள் குவைத்தினை கைப்பற்ற தம்மிடம் உதவி கோரியதாகவும், புரட்சியாளர் கையில் நாட்டை ஒப்படைத்துவிட்டு தாம் திரும்பி விடப் போவதாகவும் ஆக்கிரமிப்புக்கான காரணங்களை சதாம் அடுக்கி வருகின்றார்.

சதாம் தனது படைகளை மீளப் பெறுவதற்கு; யுத்திசாலித் தனமானதும், இராஜதந்திர ரீதியிலானதுமான பின்வரும் நிபந்தனைகளை முன்வைத்துள்ளார்.


பாலஸ்தீன காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் வெளியேற வேண்டும்

லெபனானில் இருந்து சிரியா வெளியேற வேண்டும்

அமெரிக்காவும், மேற்குலக நாடுகளும் மேற்காசிய நாடுகளிலிருந்து தத்தம் படைகளை விலக்கிக் கொள்ள வேண்டும்

தற்போது ஈராக் மீது விதித்துள்ள பொருளாதார தடைகள் நீக்கப்பட வேண்டும்

இவ் நிபந்தனைகளை கண்டு அமெரிக்க அதிபர் கொதித்தெழுந்துள்ளார். சதாம் விதித்துள்ள நிபந்தனைகளிற்கும் குவைத்திலிருந்து ஈராக்கிய படைகளை திருப்பி பெறுவதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார். இவற்றிற்கு பதிலாக சதாம் ஈராக்கில் இருக்கும் வெளிநாட்டவருக்கு கொடுத்த பகிரங்க கடிதத்தில் தமக்கும் ஈரானிற்கும் ஏற்பட்ட மோதலில் தம்மைத் தாண்டி வரும் நோக்கிலேயே அமெரிக்கா செயற்பட்டதாகவும், ஈரான் - ஈராக் யுத்தத்தில் சர்வதேச விதிகள் மீறப்பட்ட போது எந்த நடவடிக்கையும் எடுக்காது



www.tamilarangam.net



குவைத் விடயத்தில் மட்டும் இவ்வளவு அக்கறை கொள்வது ஏன் என கேள்வியை எழுப்பியுள்ளார்.

சதாம் ஹுசைன் அரபு நாடுகளின் ஒற்றுமையீனத்தை நன்கு கணிப்பிட்டு அரபு நாடுகள் தனக்கெதிராக திரும்பாமல் இருப்பதற்காக இராஜதந்திர ரீதியான நிபந்தனைகளை விதித்துள்ளார். இவ் நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், உண்மையானதாக இருந்தாலும் சதாம் இவ் நிபந்தனைகளை தனது துருப்புச் சீட்டாகவே பயன்படுத்துகிறார்.

1982 ம் ஆண்டு டுஜாயான் கிராமத்தில் இவருக்கு எதிராக மக்கள் குழுமியிருந்தனர். அவர்கள் யாவரும் அராஜகமான முறையில் கொல்லப்பட்டதுடன், தனது இராணுவ பலத்தை உபயோகித்து அக்கிராமத்தையும் அழித்து விட்டார். பாக்தாத் நகரத்திலிருந்து 65 Km தூரத்தில் வடகிழக்கில் அமைந்துள்ள அக்கிராமத்தில் பெரும்பாலானோர் - ஷியாக்கள்.

1988 மார்ச் மாதம் ஈராக்கில் குர்திஸ் தானிய பிரதேசங்களில் விசவாயுத் தாக்குதலை நேரடியாக மேற்கொண்டு 5000 அப்பாவிகளை படுகொலை செய்த சதாம் ஒடுக்கப்பட்ட தேசிய இனமாகிய பாலஸ்தீனியர்களுக்கு சார்பாக குரல் கொடுப்பதாக இன்று தன்னைக் காட்டிக் கொள்கிறார்.

சதாம் ஹுசைன் 1976 ஆண்டு தீர்மானத்தின்படி ஈரான்- ஈராக் எல்லை வரையறையினை தான் ஏற்பதாக இன்று அறிவித்துள்ளமை மற்றும் இரு நாடுகளினதும் யுத்தக் கைதிகளை பரிமாறிக் கொள்வதான நடவடிக்கைகளுக்கு குவைத் ஆக்கிரமிப்பினால் ஏற்பட்ட நிர்பந்தமே காரணமாகிறது.

மொத்தத்தில் சதாம் தன்னை ஓர் ஏகாதிபத்திய

www.tamilarangam.net



எதிர்ப்பாளனாக காட்டிக் கொள்வதாகிய அனைத்து 'தந்திரோபாய' நடவடிக்கைகளும் ஈடு நிறைகிறது என ஒருநாய் அருத கதையை தீதான் நினைவு படுத்துகிறது.

இவ்வாறு மேற்குலக நாடுகள் எண்ணெயின் விடயத்தில் அக்கறை செலுத்துவதன் நோக்கம்; மேற்கு ஐரோப்பாவினதும், ஜப்பானினதும் எண்ணெய்த் தேவையின் மூன்றில் இரண்டு பங்கை வளைகுடா நாடுகளே பூர்த்தி செய்கின்றன. அத்துடன் குவைத்தில் அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் குவித்துள்ள தமது முதலீடுகளை காப்பாற்றிக் கொள்வதற்கும், மீட்பதற்குமேயாகும். ☼☼




பிலிப்பைன்ஸில் இருக்கும் அமெரிக்க இராணுவத் தளங்களான கிளார்க் சுபிக்பே பற்றி-ய தீர்மானத்திற்கு அமெரிக்கா வந்துள்ளது. மணிலாவின் இராணுவத்தினரை திரும்பப் பெறல் சம்பந்த-மாக ஓர் உயர் மட்ட பேச்சு வார்த்தை ஆரம்பித்

www.tamilarangam.net



துள்ளது.

17 செப்டம்பரில் அமெரிக்க இராணுவத்தை ஒழுங்கு முறையிலான படை வெளியேற்றலை செய்யுமாறு பிலிப்பைன்ஸ் கேட்டுள்ளது. ஆனால் அமெரிக்க- உயர்மட்ட பேச்சாளர் துருப்புக்களை திரும்பப் பெறுதல் சம்பந்தமாக ஒரு திகதியையும், நேர அட்டவணையையும் தயாரிக்க வேண்டுமெனவும், துருப்புக்களை திரும்பப்- பெறல் சிறிது சிறிதாக நடைபெறும் என தெரிவித்துள்ளார். மணிலாவில் இருக்கும் சர்வதேச அவதானிகளின் கருத்துப்படி படை விலகுதற்கு ஆறிலிருந்து பத்து வருடகாலம் எடுக்கலாம் என தெரிய வருகிறது- இத்தளப் பிரதேசங்களுக்கான ஒப்பந்தம் 1991 ம்- ஆண்டு செப்டம்பர் வரையுள்ளது.

பிலிப்பைன்ஸில் 16000 அமெரிக்க துருப்புக்கள் நிலை கொண்டுள்ளன - இதுவே அமெரிக்காவின் 3வது பெரிய ஆசிய தளம். ஆசியாவின் மிகப் பெரிய தளம் யப்பானிலும், இரண்டாவது பெரிய தளம் தென் கொரியாவிலும் உள்ளது இவ்வகையான தளங்களை அகற்றும்படி கம்யூனிஸ்ட்கள், இடதுசாரி புத்திஜீவிகள், தேசியவாதிகள் கோரி வருகின்றனர். பிலிப்பைன்ஸின் கம்யூனிஸ்டுகளான புதிய மக்கள் இராணுவம் (N.P.A) இத்துருப்புக்களை வெளியேற்ற போராடி வருகிறது.

1988 இல் இருநாடுகளிற்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இவ்விரண்டு ஆண்டுகளில் தளவாடகை 481 மில்லியனாக தீர்மானி

www.tamilarangam.net


க்கப்பட்டது. ஆனால் அமெரிக்க காங்கிரஸ் 385 மில்லியன் டொலர்களுக்கே அனுமதி வழங்கியிருந்தது.

பிலிப்பைன்ஸில் அரசுக்கு அடுத்து அமெரிக்காவே பிலிப்பைன்சின் இரண்டாவது பெரிய தொழில் வழங்குனராக உள்ளது. பிலிப்பைன்சில் கிளார்க் சுபிக்பே அமெரிக்க இராணுவத் தளப்பிரதேசத்தில் 80000 பிலிப்பைனிய தொழிலாளர்க்கு தொழில் வழங்கப்பட்டுள்ளது.

தள வாடகை 400 மில்லியன் டொலர்களும், அமெரிக்காவின் தூதரகம் அங்கிருப்பதால் கிடைக்கும் வருமானமும் சேர்ந்து ஒரு பி(B)ல்லியன் டொலர்களை பிலிப்பைன்சின் வருமானத்திற்கு பெற்றுக் கொடுக்கிறது. இது மொத்த தேசிய உற்பத்தியின் மூன்று வீதமாகும்.

சில அரசியல் அவதானிகளின் பத்திரிகையாளர்களின் கருத்துக்களின் படி அமெரிக்க துருப்புகள் பிலிப்பைன்ஸில் இருந்து வெளியேறுவது தெளிவானது எனவும், ஏனெனில் வளைகுடா நெருக்கடி காரணமாக அங்கு துருப்புகளை பலப்படுத்த வேண்டிய தேவை அமெரிக்காவிற்கு எழுந்துள்ளது எனவும், இதற்கு பிலிப்பைன்சிலுள்ள அமெரிக்க துருப்புக்களை வாபஸ் பெறலாம் எனவும் தெரிவித்துள்ளனர். ஆயினும் மறுபக்கத்தில் நோக்கினும், குவைத்திலும் 65 000 பிலிப்பைனியர்கள் சேவை செய்வதாகவும், இவர்கள் தாய் நாட்டிற்கு திரும்பியுள்ளதால் ஏற்படப்போகும் வேலையின்மைத் திண்டாட்டம், மற்றும்

www.tamilarangam.net



பொருளாதார நெருக்கடிகளை சமாளிக்க மீண்டும் அமெரிக்காவுடன் உடன்பாட்டுக்கு வரக்கூடும் எனவும் தெரிவித்துள்ளனர். **

# * பாகிஸ்தான் *

ஆகஸ்ட் ஆறாம் திகதி பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் இசாக்கான் பெனாசிர் பூட்டோவின் ஆட்சியைக் கலைத்து விட்டு, இடைக்கால அரசின் பிரதமராக குலாம் முஸ்தபா ஜதோய் என்பவரை பிரதமராக நியமித்துள்ளார். தொடர்ந்து அக்டோபர் 24ல் மீண்டும் தேர்தல் நடாத்தப்படும் எனவும் அறிவித்துள்ளார்.



பெனாசிர் தாயார், மாமனார் உட்பட தனது உறவினர்களையும், ஆதரவாளர்களையும் உயர் பதவிகளில் அமர்த்தினார். ஊழல்களும், அதிகார துஷ்பிரயோகங்களும் சகஜமாகின. மனைவியின் செல்வாக்கைப் பயன்படுத்தி அவரது கணவரான asif ali Zardali எதற்கெடுத்தாலும் கமிசன் கோரி லஞ்ச ஊழலில் கட்டுக் கடங்காதவராக திரிந்ததனால் 'திருவாளர் பத்து வீதம்' என்ற பட்டப்

www.tamilarangam.net



பெயரைப் பெற்றுக் கொண்டார். சிந்தியர்களுக்கும், முகாஜிர்களுக்கும் இடையிலான இன மோதலில் சட்ட ஒழுங்கை நிலைநாட்டத் தவறியமை, அரசியல் அமைப்பு விதிகளை மீறியமை போன்ற குற்றச்சாட்டுகளே பெனாசிர் பூட்டோவின் ஆட்சிக் கலைப்புக்கான காரணங்களாக கூறப்படுகிறது.

தொடர்ச்சியான இராணுவ ஆட்சியினால் மக்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியுடன் தந்தையார் பூட்டோவின் அனுதாபத்தையும் பயன்படுத்தி இருபது மாதங்களுக்கு முன் ஆட்சிக்கு வந்தார் பெனாசிர் பூட்டோ. தேர்தல் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய போதும் இராணுவத்துடன் ஏற்படுத்திக் கொண்ட சமரசத்தினூடாகவே ஆட்சியை நடத்தக் கூடியதாகவிருந்தது. சுருங்கக் கூறின், அமெரிக்காவின் கைப் பொம்மையாக இராணுவமும், இராணுவத்தின் கைப் பொம்மையாக பெனாசீர் பூட்டோவும் இருந்தே ஆட்சியைத் தொடர்ந்தார்.

பெனாசிர் பூட்டோ தமது ஆட்சியை நிலைப்படுத்துவதற்கு அமெரிக்காவின் உதவியை அதிகமாக நம்பியிருந்தார் என்பதற்கு அவரின் பேட்டிகளே ஆதாரமாகின்றன.

மேற்படி தகவல்களில் இருந்து ஜனாதிபதி ஜெனரல் இசாக்கான் ஆட்சிக் கலைப்பு என்று கூறிக்கொண்டபோதும், இதை ஒரு ஆட்சிக் கவிழ்ப்பாகவே பார்க்க வேண்டும். கூறப்பட்ட திகதியில் அக்டோபர் 24 ல் தேர்தல் நடைபெறுமா? அப்படி நிகழ்ந்தாலும் தமது அதிகாரத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் உட்பட்ட அரசையே இராணுவம் பதவியிலிருத்தும் என்பது தெளிவானதே.

(தொகுப்பு - ம. நரேந்திரன்)

---

படைகள் மட்டும் கொடூரம் புரியவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லீம் பொதுமக்கள் மீதும் படுகொலை நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். கைது செய்யப்பட்ட பொலிசாரையும் படுகொலை செய்துள்ளனர். இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(23 பக்கத் தொடர்ச்சி)

www.tamilarangam.net



அல்தூஸர் ஓர் அறிமுகம்

# நூல் விமர்சனம்

- சி. சிவசேகரம் -

இந்த நூலைப்படித்து அல்தூஸர் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடியும் என்று எதிர்பார்ப்பவர்கள் ஏமாறலாம். ஏனெனில், இது அல்தூஸர் பற்றிய முறையான ஒரு அறிமுகமாக இல்லாமல், அல்தூஸரின் சில விளக்கங்களும் வியாக்கியானங்களும் ஆசிரியர்களது கருத்துக்களுடன் முரண்படுவதைப் பற்றியதும் அல்தூஸரின் சில நிலைப்பாடுகளை முன்வைத்து அவற்றிற்கு அவர்களது மறுப்புக்களைக் கொண்டதுமான ஒரு நூலேயாகும். உண்மையில் அவர்கள் யாருடன் விவாதிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் குறிப்பிடும் அல்தூஸர் ஆதரவாளர்கள் யாரென்றும் எனக்கு தெளிவில்லை. அமைப்பியல் (ஸ்ட்ரக்சுரலிஸ்ட்) மாக்ஸியத்தின் முதல்வர் என்று கருதப்படும் அல்தூஸர் பற்றிய இந்நூலில் அமைப்பியல் பற்றிய விளக்கமேதுமில்லை. அல்தூஸர் வாழ்ந்த பிரெஞ்சு அறிவுச்சூழலில் அமைப்பியலும், மொழியியலும், உளவியல்பகுப்பாய்வும் அல்தூஸர் மீது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாகக் கூறும் ஆசிரியர்கள் ஏனோ அவற்றை விளக்கத் தவறிவிட்டார்கள். தமிழில் 'ஸ்ட்ரக்சுரலிஸம்' என்ற விசயம் பற்றி தமிழவன் ஒரு விரிவான நூலை 1980களின் முற்பகுதியில் எழுதியுள்ளார். அது பற்றி இந் நூலின் குறிப்புகளிலும் கூட ஒரு சாடையையும் ஏனோ இல்லை.

என் பார்வையில், இந்த நூல், மாக்ஸ் அந்நியமாதலுக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கினார் என்ற விடயத்தை மையமாக வைத்தே உழல்கிறது என்று தெரிகிறது. அதைவிட திரு. ராஜதுரை முன்னுரையின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூறும் "மாக்ஸியத்தின் மனிதநேய 'மானுடத்துவம்' பரிமாணம் மட்டுமே நம்பிக்கை தரவல்லது" என்ற கருத்தை வலியுறுத்தும் அவசியமும் தெரிகிறது. 'மேற்கு ஐரோப்பிய மாக்ஸியத்திற்' கணிசமான பகுதி மாக்ஸியத்தைப்பற்றிய ஏட்டுச்சுரைக்காய் விவாதமாகவும் மாக்ஸின் மனதில் என்ன இருந்தது என்ற ஆராய்வுகளுமே இருந்து வந்துள்ளது. அந்த கருத்துச் சுதந்திரம் அவ்வாறே இருக்கட்டும். அந்நியமாதலும் அமைப்பியலும், இருத்தலியல்வாதமும் இன்றைய உலகைப் புரிந்து கொள்ளவும் மாற்றவுமான அரசியல் இயக்கத்திற்கும், அரசியல் நடைமுறைக்கும் என்ன பங்கை அளித்துள்ளன, அளிக்க கூடியன என்று எனக்கு நிச்சயமில்லை. நம்பிக்கை தரக்கூடிய விதமான ஒரு ஆய்வையோ அணுகுமுறையையோ இந்த நூலில் விருத்தியடையும் விவாதங்களில் என்னாற் காணமுடியவுமில்லை.

அல்தூஸரின் மொழிப்பிரயோகம் சிக்கலான முறையில் மிக எளிய விஷயத்தைக் கூறும் தன்மையுடையது என்று கூறும் ஆசிரியர்களின் எழுத்து நடை தமிழ் மொழிவழக்கிற்கு மிகவும் அந்நியமான முறையிலேயே உள்ளது. சொல்லமைப்பிலும் வாக்கிய அமைப்பிலும் உள்ள விறைப்பான தன்மைக்கு என்ன நியாயம் என்று தெரியவில்லை. இந்த நூலின் பல பகுதிகளைத் தமிழில் வாசித்துச் சிரமப்படுவோர் அதிலும் எளிதாக ஆங்கிலத்தைப் படித்து ஆங்கிலத்திலேயே ஒரு நல்ல நூலை வாசித்து அதிக பயனை அடைய முடியுமோ என்ற எண்ணமும் எனக்கு தலைதூக்கியது. இக்குறைபாடு ஓரளவுக்கு தமிழில் கலைச்சொற்களின் விருத்தி தொடர்பானது எனினும், ஆசிரியர்கள் இது பற்றிக் கூடிய சிரத்தை காட்டியிருக்க முடியும்.

அல்தூஸரின் வாதங்களை எதிர்கொள்ள ஆசிரியர்கள் மேற்கொள்ளும் வாதங்கள் பலவீனமானவை. மாக்ஸை இளம் மாக்ஸ், முதிய மாக்ஸ் என்று பிரிப்பது வெறும் கற்பனை எனவும் இரண்டிலும் விரவி நிற்பது ஒரேயொரு முழுமையான பார்வையே எனவும் வலியுறுத்தும் ஆசிரியர்கள் அந்த முழுமையான

www.tamilarangam.net



பார்வைக்கு ஒரு விருத்தியும் வளர்ச்சியும் உண்டு என்பதையும் தொடக்க நிலைக்கும் விருத்தி பெற்ற பிற்கால நிலைப்பாட்டுக்குமிடையே ஒற்றுமைகளுடன் வேற்றுமைகளும் இருக்க முடியும் என்பதையும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. (அல்தூஸரின் 'கறாரான வாதங்கள்' போல, இதுவும் ஒரு கறாரான நிலைப்பாடாக அவர்கட்குத் தெரியவில்லையோ!) மாக்ஸின் பிற்காலப் படைப்புகளில் அவரது முற்காலச் சிந்தனைகளில் காணப்பட்ட சில அம்சங்கள் அதிகம் வலியுறுத்தப்படாமை, அவற்றை அவர் முற்றாக நிராகரித்து விட்டார் என்று அர்த்தப்படாது எனினும், அவற்றிற்கு அவர் வழங்கிய முக்கியத்துவம் குறைந்து விட்டதைக் குறிக்காதா? ஒருவரது சிந்தனையின் விருத்தியின் போக்கில் ஏற்படுகிற முடிவுகள் 'சுத்தமான', 'கறாரான' முடிவுகளாகவே இருக்க வேண்டுமா?

மாக்ஸ், மனிதன் என்ற சொல்லைத் தன் இளமைக்காலப் படைப்புக்களில் (வர்க்கங்கட்கும் வரலாற்றுக்குமப்பாற்பட்ட) தனி மனிதனைக் குறிக்குமாறு பயன்படுத்துகிறார் என்று அல்தூஸர் கருதுவது தவறு, அது பொதுப்படமனிதர்கள் என்பதையே குறிக்கிறது என்பது ஆசிரியர்களது வாதம். இதை நிறுவுவதானால் மாக்ஸின் எழுத்துக்குரிய மொழிவழக்கை வைத்து (அவர் எழுதிய மொழியினதும் அது பயன்படுத்தப்பட்ட சிந்தனைத் துறையின் மொழிவழக்கிற்கும் சார்பாக) வாதங்களை முன்வைக்க முடியுமே ஒழிய, தமிழிலும் ஆங்கிலத்திலும் உள்ள நாளாந்த மொழிவழக்கு, ஆசிரியர்களது வாதங்களை நிறுவப் போதியதல்ல.

சிலருக்கு மாக்ஸியம் என்பது மாக்ஸின் மனதின் செயற்பாடு பற்றிய ஆராய்வாகவே இருக்கிறது. லெனினும், மாஓவும், மாக்ஸியத்தை விருத்தி செய்ய அதன் சாராம்சத்தைப் புரிந்து கொண்ட விதம் வேறு. மாக்ஸியத்தை முன்னெடுத்துச் செல்ல முன்னைய வகையான ஆய்வுகளை மேற்கொள்வோர் என்ன பங்களிப்பை வழங்க முடியும் என்பதை வரலாறு தீர்மானிக்கட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஐரோப்பிய மாக்ஸியவாதிகள் பலரின் ஆய்வுகள் தவறவிட்ட ஒரு முக்கிய உண்மை: முதலாளித்துவத்தின் முரண்பாடுகள் இன்று மார்க்ஸின் காலத்தின் தேசிய எல்லைகளைத் தாண்டி, லெனின் கண்ட ஏகாதிபத்திய வடிவத்தின் அதி பயங்கர விருத்தியாக முழு மனித இனத்தினதும் இருப்பையே மிரட்டும் நிலைக்கு வந்துள்ளன. முதலாளித்துவ நாடுகளின் தேசிய எல்லைகட்குள் வர்க்கப் போராட்டத்தையும் முரண்பாடுகளையும் ஆராய்ந்து தொழிலாளி வர்க்கத்தின் மீது நம்பிக்கை இழந்து போய்ச் சமுதாயத்தின் விளிம்பில் நிற்கும் உதிரி வர்க்கங்களையும் மாணவர்களையும் புரட்சியின் முன்னோடிகளாகக் கண்டவர்களின் ஆய்வுகளும் பொய்த்து விட்டன. காரணம் என்ன? இதை மறந்து 1968 இன் பிரெஞ்சு மாணவர் எழுச்சி, கிராம்ஸ்சி, லூக்காஷ் போன்ற விஷயங்களில் விமர்சனமின்றி ஒரு தலைப்பட்சமான தன்மையை ஆசிரியர்கள் காட்டுகின்றனர். ஸ்டாலின், ஸ்டாலினிசம் (இது மாவோ இசம் போன்று, அமெரிக்கா அதிலும் அதிக முனைப்புடன், ஸ்டாலின் எதிர்ப்பாளர்கள் உருவாக்கிப் பயன் படுத்தும் ஒரு சொல்) என்ற விஷயங்கள், அவற்றிற்குரிய வரலாற்றுச் சூழல்களைக் கணிப்பிலெடாமலே பகைமையுடன் கையாளப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் மிகுந்த அனுதாபங் காட்டும் மாவோ, ஸ்டாலினுடன் மிகுந்த கருத்து வேறுபாடுகளையுடையவராக இருந்த போதும், ஸ்டாலின் பற்றி மேற்கொண்ட ஆய்வுகள் மிக நிதானமானவை. ஸ்டாலினிசம் என்று அக்காலத்தில் வசைபாடப்பட்ட சிந்தனைப் போக்கே சீனாவிலும், வியட்நாமிலும் வேறு பல நாடுகளிலும் அதி உன்னதமான வெற்றிகட்கு வழி காட்டியது.

"உலகெங்கும் வலது சாரிப் பிற்போக்கு அலை அடித்த வண்ணம் இருக்கிறது" என்ற ராஜதுரையின் கூற்று ஒரு அரை உண்மை. வரலாறு என்றுமே நேர்கோட்டில் விருத்தியடைந்ததில்லை, விருத்தியடையவும் முடியாது. முதலாளித்துவத்தின் நெருக்கடியின் தோற்றப்பாடுகளை நாம் வரலாற்றுப் போக்கின் முழுமையுடன் குழப்பிக்கொள்ளக் கூடாது. காலம் என்கிற

(தொடர்ச்சி 37 ம் பக்கம்)

www.tamilarangam.net



திரைப்பட விமர்சனம்:

# கேளடி கண்மணி



கேளடி கண்மணியில் ராதிகா, எஸ்.பி.பி.யுடன் வஸந்த்

வீர, சாகசங்கள் நிரம்பிய 'திறமை' படைத்த கதாநாயகன், அவனுடன் முரண்பட்டு; பின்பு அவனுக்காகவே ஏங்கும் கதாநாயகி, புருகீக குருக்க கெட்ட குணங்கள் மாத்திரமே நிரம்பிய வில்லன்கள். இத்தகைய புளித்துப் போன மசாலக்களையே நீண்டகாலமாக ரசித்து வரும் ரசிகர்களுக்கு; இடைக்கிடையே இவற்றிலிருந்து சற்று விடுபட்ட நல்ல கதையம்சத்தைக் கொண்ட தமிழ்ப் படங்களைப் பார்க்கும் வாய்ப்பும் கிடைக்கிறது. இத்தகைய நல்ல படங்களின் வரிசையில் தற்பொழுது வெளிவந்துள்ள "கேளடி கண்மணி"யும்

36 ம் பக்கத் தொடர்ச்சி.

பரிமாணம் கொஞ்சம் விரிவானது. நமது சமுதாயங்களை உலக சமுதாயத்துடன் உறவுபடுத்தி, நமது குறிப்பான அம்சங்கட்கும், உலக வரலாற்றின் பொதுவான போக்கிற்கும் உள்ள ஐக்கியத்தையும் வேற்றுமையையும் சரிவர அடையாளங் காண்பதன் மூலமே நம்மால் முன்னோக்கிச் செல்லமுடியும். மார்க்சியத்தின் 'மனிதநேய' 'மானுடத்துவப்' பரிமாணத்தில் மட்டுமே நம்பிக்கையைத் தரிசிக்கின்ற போக்குப் புதியதல்ல. அதன் மூலம் மார்க்சியத்தைச் சிந்தனை மட்டத்திலும் செயல்மட்டத்திலும் வளர்த்தெடுக்கிற பேச்சு இதுவரை எதையும் சாதிக்கவும் இல்லை. ஆசிரியர்கள் எதையாவது சாதிக்க விரும்பினால் முதலில் தெளிவாகவும் எளிமையாகவும் எழுதப் பழகட்டும்.

www.tamilarangam.net



தன்னை தக்க வைத்துக் கொள்கிறது.

கதையம்சம் என்று எடுத்துக் கொள்கிற போது வழமையான காதல் கதைகளை விட்டு வித்தியாசமாக அமைந்த "பூவே பூச்சூடவா" போன்றதே கேளடி கண்மணியும். அதில் பாட்டிக்கும் - பேத்திக்கும் நடக்கும் பாசப் போராட்டங்களையும், தலைமுறை இடை வெளியிலான வித்தியாசங்களையும் காட்டியது போல் கேளடி கண்மணியும் தகப்பனுக்கும் மகளுக்கும் இடையில் நடக்கும் பாசப் பிணக்குகளையும் அவை உளவியல் ரீதியாக ஏற்படுத்தும் தாக்கங்களையும் காட்டுகிறது.

சிறு வயதிலேயே தாயை பறி கொடுத்த அஞ்சு தகப்பனின் அரவணைப்பில் வளர்கிறள். அவளுக்கு ஒரு தகப்பனாக மாத்திரம் இல்லாமல் நல்ல நண்பனாக, வழிகாட்டியாக, ஒரு தாயுமானவனாக வாழ்கிறர் தந்தையாக வரும் எஸ்.பி.பாலசுப்பரமணியம் இவர்களின் வாழ்க்கையில் குறுக்கிடுகிறர் ரீச்சராக வரும் ராதிகா. ஏழைமையான பெற்றோரின் எதிர்காலத்தை கருதி தான் திருமணமே செய்து கொள்ளாமல் இருப்பதாக முடிவு செய்கிறர். ஆனால் தன்னை புரிந்து கொண்ட எஸ்.பி.யின் நட்பு கிடைத்தவுடன் திருமணம் பற்றிய தனது முடிவை மாற்றிக் கொள்கிறர். நட்பு காதலாக மாறுகிறது. ஆனால் குழந்தை அஞ்சு அப்பாவிடம் இருந்து தனக்கு கிடைக்கும் அன்பை பங்கு போட வந்த ரீச்சரை ஆத்திர உணர்வுடனே அணுகிறள். தனது தாயின் பொருட்களை பாவிப்பதை வெறுக்கிறள். விளைவு குழந்தையின் எதிர்காலம் கருதி இருவரும் பிரிய நேர்கிறது. வளர்ந்து பெரியவளான அஞ்சு தானும் காதல் உணர்வுக்கு ஆளாகி பின்பு பிரிய நேர்கையில் முன்பு தந்தையின் காதலை பிரித்த தவறை எண்ணி வருந்துகிறள். இறுதியில் அவர்களை ஒன்று சேர்ப்ப

www.tamilarangam.net



திற்கான முயற்சியில் இறங்கி அதில் வெற்றியும் பெறுகிறான். இதுவே படத்தின் சுருக்கமான கதை.

உளவியல் ரீதியான சிக்கல் நிறைந்த கதையை லாவகமாக கையாண்டிருக்கிறார் படத்தின் இளம் இயக்குனர் வைஸ். எஸ்.பி பால சுப்பரமணியம் தனது அமைதியான நடிப்பால் ஆழமாக முத்திரை பதிக்கிறார். மழைபக்குவம் அடைந்த நடுத்தர வயதுப் பெண்ணாக நடிப்பில் தனது முதிர்ச்சியைக் காட்டியிருக்கிறார் ராதிகா.

படத்தின் ஆரம்ப காட்சிகள் வழமையான காதல் கதை போலவே தொடங்கினாலும், சில காட்சிகளின் பின் கதை எடுத்துக் கொண்ட கருவின் மையத்தை சுற்ற நகர்கிறது. சிறு வயதிலிருந்தே தாயிடத்தில் இருந்து குழந்தையை வளர்த்து வரும் ஒரு தந்தையின் பாச உணர்வு தாய்மை உணர்வுக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்பதை குழந்தைமேல் அன்பை பொழிவது, குழந்தையை காணாமல் தவிப்பது, வளர்ந்த பின்பு மகளை நண்பனைப் போல் மதித்து பழகுவது, இறுதியில் மகளின் பிரிவை எண்ணி துடிப்பது போன்ற காட்சிகள் நிரூபிக்கின்றன. இவை நமது நெஞ்சை நெகிழ வைக்கின்றன. இங்கு தான் தாய்மை உணர்வு என்பது இருபாலானவர்கும் பொதுவான ஒன்று என்பது கவனிக்கப்பட வேண்டியதாகிறது.

"ஒரு பெண் ? கருவை தனது வயிற்றில் சுமக்கிறபோதே ஒரு தாயின் கடமைகள் தொடங்குவது போலவே ஒரு ஆணின் கடமையும் தொடங்கு கிறது. குழந்தை பிறக்கும் முன்பும், பின்பும் குழந்தையை குளிப்பாட்டுவதிலிருந்து, வளர்ப்பது வரை ஒரு ஆணும் பங்கேற்க வேண்டும், நேரமும், உழைப்பும், உணர்வும் செலவளிக்கப்பட வேண்டும். அப் பொழுது இயல்பாகவே குழந்தையிடம் தாய்ப் பண்புகள் கொண்டவனாக அவன் ஆகிறான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் சமூகத்தில் அந்தக் கடமையை ஆற்றாத, சூழலும் பிரக்ஞையும் கொள்ளாதவகை ஆண் இயங்குகிறான். பெண்ணின் இடத்திலிருந்து செய்திருந்தால் அவனுடைய பாசமும் அவளுக்கு சமதையாக வெ நிற்கும்". [நன்றி-மனஓசை]

தகப்பன் என்றாலே கண்டிப்பும் கறுப்பும் முட்டுமே நிறைந்தவர் என்ற மதிப்பீடு இங்கு உடைபடுகிறது. ஒரு ஆணுக்கு இன்னொரு ஆண் நண்பனாயிருப்பது போல், பெண்ணுக்கு பெண் சிநேகிதமாய் இருப்பது போல், ஆணும்-பெண்ணும் நட்பாக இருப்பது என்பதையே தவறாக பார்க்கும் அல்லது கொச்சைப்படுத்தும் மரபுக் கண்ணோட்டத்தை மீறும் "புது வசந்தம்"ஆயினும் சரி, கேளடி கண்மணியாயினும் சரி இன்று பெரும் வரவேற்பை பெற்றிருப்பது என்பது இளைய சந்ததியினர் இத்தகை கருத்துக்களை விரும்புகின்றனர் என்பதையும், அவர்களின் சிந்தனையில் ஏற்பட்டு வரும் மாற்றத்தையுமே காட்டுகிறது. ஆனாலும் மகளின் காதலைப் புரிந்து கொண்டு அதனை இலகுவாக தந்தை ஏற்றுக் கொள்வது போல் காட்டப் படுகிறது. காதலன் வேறு மதத்தையோ அல்லது சாதியையோ சேர்ந்தவராயின் தகப்பன் சம்மதித்திருப்பாரா? இது கதைக்கு சம்பந்தமில்லாத கேள்விபோல தோன்றினும், இன்று சமூகத்தில் [தமிழகத்தில்] எரிந்து கொண்டிருக்கும் சிந்தனைக்குரிய பிரச்சனைகளாகும். இத்தகை பிரச்சனைகளை தமிழ் திரைப்படங்கள் அதன் சரியான பரிமாணத்தில் தொடும் காலம் என்றோ?

இன்று தமிழ் படவுலகில் கேளடி கண்மணி-வசந், புது வசந்தம்-விக்ரமன் போன்ற இளைய தலைமுறையினரால் ஏற்பட்டிருக்கும் மாறுதல் அவை நீடிக்குமா? என்பது சந்தேகமே. ஏனெனில் தமது முதல் படங்களை ஓரளவுக்கு தரமாக தருமேயாயினும் இயக்குனர்கள் பின்பு வியாபார ரீதியிலான போட்டியில் முகம் கொடுக்க முடியாமல் மசாலாப் படப்பாணியில் வீழ்ந்து விடுவதும் அப்படி அல்லாதவர்கள் தூக்கி எறியப்படுவதும் வழமையான ஒன்று. எது எப்படியாயினும் வியாபார ரீதியிலான மசாலாப் பட

(தொடர்ச்சி 43 ம் பக்கம்)

www.tamilarangam.net

# காரிய (?) நகர்வுகள்

ஆதரவற்ற அந்நியத் தெருக்களில்
ஆதவனற்ற கரும்புகார் பனித்திரையிறக்கு
நாடற்று நாதியுறும் எம் அகங்களைப்
புடம் போடும்!
அகங்களிலே அபிலாசைகளை
அடைத்து வைத்து நாமிருந்தும்
அடக்குகின்ற அரசுகள்
ஆட்டத்தைக் காண்கையிலே
அவிழ்த்த விடும் 'அவுஸ்லாண்டன்'
அர்த்தமற்று எதிரொலிக்கும்!
நடைப்பிணம் போல் நாமிருந்தும்
நாட்காட்டியின் நர்த்தனங்கள்
"நகர்வுகள்" என்றுமே 'நனவுகள்'
என்பதை உணர்வுகளில்
நினைவு கூடும்!
வர்க்க நினைவுகளை மீட்டுவதாய்
வாயிந்நீரை வார்ப்பவர்கள்
வாழ்க்கையிலோ நிணம் தன்னை ருசிக்கையிலே
நிலையறியாச் சமுதாயம்
நிலைகொள்ள நீளும்!
நீண்டாலும் நீதிக்காய்
நித்தமும் நிமிராத மக்கள்
நிமிருகின்ற எரிமலையாய்
கக்குகின்ற கனல்களிலே
காதல் கொண்டு
கிண்தயினும்.

ச.ரகுபதி

பி.கு: இங்கு "அவுஸ்லாண்டன்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பது வெளிநாட்டவரை! ஆனால் உள்ளடக்கம் ஒவ்வொரு நாடுகளில் ஒவ்வொரு விதமாக தேசிய இனங்களாகவோ, நிறவெறியாகவோ, சாதி மத வெறியாகவோ உள்ளது. இதையே இங்கு "அவுஸ்லாண்டன்" என ஒரு அர்த்தத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

www.tamilarangam.net


## * வறிய நாடுகளிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மகாநாடு *

41 அபிவிருத்தி அடையா நாடுகளிற்கான இரண்டாவது மாகாநாடு வளைகுடா நெருக்கடி காரணமாக பாரிசில் கூட்டப்பட்டது. இம்மகாநாட்டினை பிரான்ஸ் அதிபர் மித்திரன் ஆரம்பித்து வைத்துள்ளார்.

இம்மகாநாட்டில் 150 நாடுகளின் பிரதிநிதிகளும் அமைப்புக்களும் கலந்து கொண்டன. செப்டம்பர் 14ம் திகதி வரை இம்மகாநாடு நடைபெற்றது. மேலும் இம்மகாநாட்டில் கைத்தொழில் நாடுகளின் மொத்த உற்பத்தி தொகையின் 0.2 வீதம் அதிகரிக்குமாறு கோரப்பட்டது. வளைகுடா நெருக்கடியினால் ஏற்பட்ட எண்ணை விலையின் அதிகரிப்பு வறிய நாடுகளை பாதிப்புக்குள்ளாக்கும் எனவும் நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களை இந்நாடுகள் இழக்க நேரிடும் என சுட்டிக்காட்டப்பட்டது.


ஐக்கிய நாடுகளின் பாரிஸ் மகாநாடு 41 அபிவிருத்தி அடையாத நாடுகளின் - அதாவது 440 மில்லியன் மக்களின் நலன்களின் - எதிர் காலத்தில் கூடுதல் அக்கறை செலுத்துமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ் 41 அபிவிருத்தி அடையா நாடுகளில் 28 நாடுகள் ஆபிரிக்க நாடுகளை சேர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந் நாடுகளில் வருடத்திற்கு 200 டொலருக்கு குறைவான வருமா

www.tamilarangam.net



ன தினை பெறும் நாடுகளும் உள்ளன. இவ்வகையான நாடுகளில் ¾ பகுதியினர் விவசாயிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

கீழ்காணும் அட்டவணை அதிக்கூடிய தலா வருமானத்தினை பெறும் நாடுகளையும் 200 டொலரிற்கும் குறைந்த தலா வருமானத்தினை பெறும் நாடுகளையும் காட்டுகின்றது.




சினிமா விமர்சனத் தொடர்
(40 ம் பக்கத் தொடர்ச்சி)


ங்களை தயாரிக்கும் தயாரிப்பாளர்கள் வழமையாக "ஜனங்கள் இத்தகை படங்களையே [மசாலாப்படங்களையே] விரும்புகின்றனர். அதனாலேயே அவற்றை நாம் தயாரிக்கிறோம்" என ரசிகர்கள் மேல் போடும் பழி எத்தகைய பொய் என்பதை கேளடி கண்மணி போன்ற படங்களின் வெற்றி நிரூபித்துள்ளது.

- ராகவன் -

www.tamilarangam.net

சுவிஸில் -

# ஊர்வலமாய் திரண்ட தொழிலாளர்கள் !




செப்ரம்பர் மாதம் ௨0ம் திகதி நண்பகல் இரண்டு மணியளவில் இரு பதினாயிரத்துக்கும் அதிக மான தொழிலாளர்கள் சுவிஸ் பாராளமன்றத்துக்கு முன்பாக ஊர்வலமாய் திரண்டனர்.

நாற்பது மணித்தியால வேலை, பதினைந்து வீதம் சம்பள அதிகரிப்பு என்ற முழக்கங்களை இந்த ஊர்வலத்தில் முக்கிய கோசங்களாய் இருந்தன. கட்டிட, மரவேலை தொழிலாளர்களின் தொழிற்சங்கமான Gewerbshaft Bau und Holz [GBH] இனைல் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி ஊர்வலத்தில் சுவிஸ் தொழிலாளர்கள் மட்டுமன்றி சுவிஸில் உள்ள ஏனைய நாட்டு தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

தொழிலாளர்களுக்கு சமூகபாதுகாப்பு, வாக்களிக்கும் உரிமை, தொழிற் சங்கங்களில் சம உரிமை போன்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் பாராளமன்றத்தில் சமர்பித்தனர். இவ்வூர்வலத்தில் முக்கியமாக கவனிக்கப்படக்கூடியதாக இனவாதத்திற்கு எதிராக கோசம் எழுப்பபட்டமையும் பல நாட்டு தொழிலாளர்களின் இசை வழங்கல் சங்கமித்ததையும் கூறலாம்.

www.tamilarangam.net



• சிறுகதை •

# ஏதலை

இன்று வெள்ளிக்கிழமை. சனி, ஞாயிறு விடுமுறை நாள். வேலை விடுமுறை நாள் என்றாலே இங்கு எல்லோருக்கும் ஓர் மகிழ்ச்சியான நாள் தான். வேலை விட்டு வரும்போது நடந்த விஷயத்தை நாதனுக்கு சொல்ல வேண்டும் என்று நினைத்தவாறு கதவைத்திறந்தான் காந்தன். காந்தன் வந்தது கூட தெரியாமல் கட்டிலில் யோசித்தவாறு கிடந்தான் நாதன்.



"என்னடா யோசிக்கிறாய்"

"ஒண்டுமில்லையடா"

"வீட்டு ஞாபகம் போல"

"இவ்வளவு நாளா வீட்டில இருந்து கடிதம் ஒண்டும் வரேல்ல. எங்கட ஊரிலயும் ஆமி வந்து இறங்கீற்றுங்களாம். என்ன நடந்துதோ தெரியாதடா"

"நானும் கேள்விப்பட்டனான்ரா. அதுக்கு நீ யோசிச்சு என்ன நடக்கப் போகுது. எனக்கும் அப்பா, அம்மா, தங்கச்சி இருக்கினம்தான். என்ன செய்யிறது. ஏதோ எல்லோருக்கும் நடக்கிறது தான் நடக்கும்"... என்றவன் அந்த சம்பவம் நினைவுக்குவர,

"இண்டைக்கு எங்கட வகுப்பில படிச்ச சாந்தியைக் கண்டன்ராப்பா"

"ஆரடா நம்மட சாந்தியா எங்கயடா இருக்

www.tamilarangam.net



கிறாள்" என்றான் நாதன் ஆச்சரியத்துடன்.

"Luzern இல தான் இருக்கிறாள். அவளின்ர ஊர் பெடியன் ஒருத்தனைக் கல்யாணம் கட்டி. நான் வேலையால வரேக்க Bahnhof இல சந்திச்சனான்"

"அவள் நல்லா கதைப்பாளேயடா"

"கதைப்பாளடா ஆனா கதைக்க சந்தர்ப்பம் கிடைக்கேல்லை. கல்யாண வீடொண்டுக்கு அவசரமா போகினமாம். நாளைக்கு 11 மணிக்கு கட்டாயம் வீட்டுக்கு வரச் சொன்னவள். விலாசமும் தந்தவள் உன்னையும் வரட்டாம்"

"புருசனும் நிண்டவனே"

"ஓமடா அறிமுகம் செய்து வைச்சாள். ஆனா அவன் அவ்வளவு முகம் கொடுத்து கதைக்கேல்ல"

"புருசன் முகம் குடுக்கிறேனா இல்லையோ நீ சாப்பாடெண்டா அலைவியே"

"சரி.. சரி.. நீ சமைக்க ஆயத்தம் செய் நான் இந்த வேலைக்குப் போற உடுப்பை மெசினில போட்டிட்டு வாறன். சாப்பிட்டிட்டு படம் ஒண்டு பாப்பம்" என்ற காந்தன் செல்லருக்கு விரைந்தான்.

காந்தனும், நாதனும் ஒன்றாகவே செல்விப்பனையில் A/L வரையும் படித்தார்கள். பின் நாட்டு அனர்த்தங்களால் காந்தன் 6 வருடங்களுக்கு முதலே வந்துவிட்டான். அவன் வந்து 2 வருடங்களுக்குப் பிறகுதான் நாதன் வந்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் அந்த 2 வருட இடைவெளியில் சாந்-தன் சரியாக மாறிவிட்டான். இங்கு எம்மவர்க-ளின் போக்கிகளாலும், 'நாகரீக' மோகங்களாலும் வேதனையடைந்திருந்த காலகட்டத்தில்தான் நாதனும் இவனது காம்பிற்கே வந்து சேர்ந்ததால் அவனையும் இந்த சேற்றில் மூழ்காமல் காப்பாற்றி-விட்டான். சிந்திக்க கூடியவனாக மாற்றினான். சாந்தன் எந்த விஷயங்களுக்கும் சற்று கூடுதலாகவே உணர்ச்சிவசப்படுவான். ஆனாலும் அவன் எடுக்கும் முடிவு சரியாகவே இருக்கும்.

சாந்தி இவர்களோடுதான் A/L வரை படித்தாள். வகுப்பில் மற்றைய பெண்களை விட இவள், ஆண்கள் எல்லோரோடும் சகஜமாகவே பழகுவாள். பாடசாலையில் நடக்கும் விழா எதுவென்றாலும் முன்னின்று செய்வாள். ஒருமுறை அடு-த்த பிரிவு மாணவர்களோடு பிரச்சனை வந்து ஆசிரியர் வரையும் போனது. அப்போது சாந்தி தான் தன் சக மாணவர்களுக்காக ஆசிரியரோடு வாதாடினாள். சாந்தி வகுப்பில் இருந்தால் வகுப்பு எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். அவளிடம் இருந்த நியாயத்திற்காக வாதாடும் குணம், கலகல-ப்பு, உயர்ந்த நட்புணர்வு இவற்றினால் பலரைக் கவர்ந்தது போலவே சாந்தனிடத்திலும் ஓர் உயர்வான மதிப்பை பெற்றிருந்தாள். ஆயினும் இந்த வகைய பெண்களுக்கு சமூகத்தில் இருக்கும் மதிப்பீட்டையும் அவள் பெறத்தவறவில்லை. A/L

www.tamilarangam.net


பரீட்சை முடியும் வரை ஒன்றாகவே இருந்தவர்கள், பரீட்சை முடிந்ததும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கமாகப் பிரிந்தார்கள். அதன்பின் இன்றுவரை இவர்கள் சாந்தியைச் சந்தித்ததில்லை.

அடுத்தநாள் 8.30 மணி றெயின் பிடித்து சாந்தி கொடுத்த விலாசத்திற்கு எப்படியோ 10.30 மணியளவில் போய்ச் சேர்ந்தார்கள் சாந்தி தான் கதவைத் திறந்தாள்.

"வாங்க... இருங்க".. சம்பிரதாயமான வரவேற்பு. இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

ஒரு அளவான வீடு படுக்கையறை சாத்திக்கிடந்தது. ஹோலில் மூலையில் மேசை, அதன்மீது றேடியோ இருந்தது. பக்கத்தில், T.V, வீடியோ யாவும் இருந்தது. சுவரில் கடவுள் படங்கள் மாட்டியிருந்தன.

கோப்பியைக் கொண்டுவந்து மேசையில் வைத்தவாறே

"அவர் படுத்துக்கிடக்கிறார், நான் நீங்க வருவீங்க என்டு சமைச்சுக்கொண்டு நின்டனான் கொஞ்சம் இருங்க கறி அடுப்பில இருக்கு இறக்கி வைச்சிட்டு வாறன்".

சிறிது நேரத்துக்கெல்லாம் சமையல் வேலைகளை முடித்துக்கொண்டு வெளியே வந்தாள்.

"நீர் வந்து எத்தினை வருஷம். எப்ப கல்யாணவீடு நடந்தது. எங்களுக்கு ஒன்றுமே தெரியாது" காந்தன் தான் கேட்டான்.

www.tamilarangam.net



"நான் வந்து 3 வருஷமாகுது. எனக்கு பொம்பிளை பிள்ளை இருக்கு"

"வேலை செய்கிறீரா?"

"இல்லை ....."

"பிறகு எப்பிடி வாழ்க்கை?" நாதன் கேட்டான்.

"என்ன... வாழ்க்கை என் இங்க வந்தும் என்றிருக்கு" ஒரு பெருமூச்சுடன் சொன்னாள்.

"வேலை செய்யலாமே"

"எங்க பிள்ளையோட நேரமில்லை. விடிய அவர் வேலைக்குப் போய்விடுவார். பிறகு பிள்ளை, சமையல் இப்படியே நேரம் போயிடும். பிறகு வேலை செய்ய நேரமெங்க... அதோட.... நான் வேலை செய்யிறது இவருக்கும் விருப்பமில்லை"

அவர் வேலைக்குப் போவது புருசனுக்கும் பிடிக்கவில்லை என்பதை இவ்வாறு உதாரணங்களோடு சொன்னாள். அவளது ஒவ்வொரு விடைகளும் சுருக்கமாக முடிவாக முடிந்தது.

"மூண்டு வருசம் என்கிறீர் இவ்வளவு நாளைக்கு சந்திக்காம இருந்திருக்கிறம்"

"நான் அதிகமா ஒரு இடமும் வெளிக்கிடுறதில்லை"

இவர்களின் உரையாடல் நடந்து கொண்டிருக்கும் போது படுக்கையறையிலிருந்து வெளிவந்த சாந்தியின் கணவன் "ஹலோ" என ஒரு மென் சிரிப்பை உதிர்த்துவிட்டு குளியலறைக்குச் சென்றான்.

தனது கேள்விகளுக்கு மட்டும் பதிலளித்துவிட்டு

www.tamilarangam.net


மௌனமாகிவிடும் சாந்தியையும், பள்ளிக்கூட நாட்களில் கலகலப்பாக சுற்றித்திரிந்த சாந்தியையும் ஒருகணம் நினைத்தபொழுது, அது அனுதாபம் கலந்த வேதனையைக் கொடுத்தது. இப்படித்தானே எங்கள் பெண்கள் ஆண்களுக்குள்ளேயே அடக்கமாகிவிடுகிறார்கள். ஆனால் சாந்தி எப்படி இவ்வாறு மாறி போனாள்? ஒருவேளை கணவன், குடும்பம் என்று வந்துவிட்டால் எல்லாவற்றையுமே.. 'சமாளித்து' வாழ வேண்டும் என்பதில் சாந்தி சங்கமமாகிவிட்டாளோ?.. .... என்று சிந்தனையில் மூழ்கிய காந்தன் "சாப்பிடுவமா?" என்று சாந்தியின் குரல் கேட்டு தன்னை சுதாகரித்துக் கொண்ட காந்தனால் ஒன்றுமே கதைக்கமுடியவில்லை.

"அதுக்கென்ன சாப்பிடுவம்" என்றான் நாதன்.

நாதனும் காந்தனோடு ஒன்றுமே கதைக்கவில்லை. காந்தனின் மனஓட்டம் நாதனுக்கு தெரியாதா என்ன?

பின் எல்லோரும் சாப்பிட்டார்கள் சிறிது நேரம் இங்குள்ள வேலை நிலைமைகளைப் பற்றி சாந்தியின் கணவருடன் கதைத்துவிட்டு சம்பிரதாயமாக விடைபெற்றார்கள். ரெயினில் வரும் வரையும் இருவரும் ஒன்றுமே பேசவில்லை.

"என்னடா பேசாமல் வாறாய்? நீ என்ன நினைக்கிறாயென்று எனக்குத் தெரியும்" நாதன் தான் முதலில் பேசினான்.

"இல்லையடா.... சாந்தியைப் பார்க்க...."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஓமடா எவ்வளவு கலகலப்பா இருந்தவள்"

"நாதன் எங்கட சமூகம் இன்னும் இப்படியே ஆணுக்குப் பெண் அடங்கித்தான் கிடக்குமாடா. எப்பதான் இந்தப் பொம்பிளையள் புருஷன்ட வட்டத்துக்குள்ள இருந்து வரப்போயினம். நாங்க பள்ளிகூட நாட்களில சந்தித்த சாந்தி எங்க? இப்ப"...... இடையில் நிறுத்தினான்.

றெயின் ஓடிக்கொண்டிருந்தது.

"ஆன ஒண்டடா நாதன் எங்கட சமூகத்தில புருஷன் செத்தால்தான் ஒரு பெண்ணை விதவை என்று சொல்லுறம். ஆன உண்மையிலேயே, இப்பிடி புருசனுக்கு அடங்கி எல்லா சுதந்திரத்தையும் இழந்து, தனக்கு உயிரூட்டிக் கொண்டிருந்த அந்த உன்னதமான உணர்வுகளையெல்லாம் கொன்றுவிட்டு, வெறுமையாக இருக்கிறாளே அவளும் ஒரு விதவைதான். என்ர கண்ணுக்கு சாந்தியும் விதவைதானடா." உணர்ச்சியாக சொல்லிவிட்டு யன்னலால் வெளியே பார்த்தான் காந்தன். றெயினின் ஓட்டத்தால் மரங்களி யாவும் பின்னோக்கி ஓடிக்கொண்டிருந்தன.

* * * * *    - ஆனந்தி -

**பெண்களின் துணிவு:**

எமது சமுதாயத்தில்கூட யுத்தகாலத்தில் பெண்கள் உறுதியாக வெளிவந்துள்ளார்கள், பல சந்தர்ப்பங்களில் இவர்கள் இந்திய இராணுவத்தின் அத்துமீறிய நடவடிக்கைகளைத் தனிநபர்களாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ நின்று வெளிப்படுத்தினார்கள். மறுபக்கத்தில் போரின் மத்தியில் பெரும்பாலும் பெண்களே போராளிகளுடன் தங்களுடைய குடும்பங்களுக்காகவும் முழுத்தேசத்திற்காகவும் இரந்தும், விவாதித்துமுள்ளார்கள். மேலும், மட்டக்களப்பில் பெண்களே மற்றவர்களைப் பாதுகாப்பதற்காகத் துப்பாக்கிகளையும் பொருட்படுத்தாது உண்ணாவிரதமிருந்தார்கள். எங்களுடைய சமுதாயத்தையும் நாட்டையும் எதிர்கொள்ளும் தெளிவற்ற அரசியல் வெறுமையை மதிப்பீடு செய்யும்போது பெண்களின் வரலாறானது ஏதோவொரு வெற்றியைக் கொண்டேதானுள்ளது. அதிகாரமின்மை, ஏமாற்றம். விரக்தி ஆகியவற்றினிடையே நம்பிக்கையும் உள்ளது. ஆம், நாங்கள் செய்துள்ளோம் - ஓர் சிறிதளவு

கலாநிதி. ராஜனி திராணகம

www.tamilarangam.net

சுவிஸில் :

# * தட்சருக்கு எதிர்ப்பு

செப்ரம்பர் மாதம் 20 ம் திகதி சுவிட்சர்லாந்திக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்ட பிரித்தானியாவின் பிரதம மந்திரி மார்க்கிரட் தட்சரின் வருகையை எதிர்த்து பாராளுமன்றத்துக்கு முன்பாக ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தப்பட்டது.

"வட அயர்லாந்தில் இருந்து மாகி [Maggie] யை வெளியேறு" என்ற கோஷங்களோடு தட்சரின் வட அயர்லாந்து மீதான இராணுவ அரசியல் நடவடிக்கைகளைக் கண்டித்து நூற்று ஐம்பதுக்கும் அதிகமானோர் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். 92ல் ஏற்படவிருக்கும் "ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில்" சுவிஸையும் இணைந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்த மார்கிரட் தட்சர், தமது பதவிக் காலத்தில் முதல் தடவை சுவிஸ் வந்திருந்தார்.




* * *



(தட்சருடன் சுவிஸ் பாராளமன்ற அதிபர் அர்னோல்ட் கோவ

www.tamilarangam.net

# ஏக்கம்

தூரத்தே கேட்ட
துப்பாக்கி ஓசை
அவளை ஒரு கணம்
ஏங்க வைக்கும்

வேலைக்குப் போன
கணவனின் நினைவு
பாடசாலை சென்ற
மகனின் எண்ணம்

செய்தி அறிந்திட
தெருவுக்கு ஓடுவாள்
வருவோர் போவோரை
விசாரிக்க மறக்கமாட்டாள்

இருவரின் வரவைப்
பார்த்து
ஏக்கத்துடன்
காத்து நிற்பாள்
மீண்டும் மறுநாள்
அதே ஏக்கம் !

- குப்பிளான் ஜெகன் -

www.tamilarangam.net



# தமிழ் தேசிய இனத்துள் குறுந்தேசிய வாதம்

எமது நாட்டில் என்றுமில்லாதவாறு இனப் படுகொலைகள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. கடந்த இருமாதங்களுக்கு மேலாக விடுதலைப்புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்றுவரும் சண்டை மோதல்களில் இராணுவம் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வெறித்தனக் குண்டுவீச்சுக்களால் வடகிழக்கின் பிரதான நகரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ் நகரம் எரித்து அழித்தொழிக்கப்பட்டுள்ளது. 3000 மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். குண்டுவீச்சுத் தாக்குதல்களால் பீதிகொண்ட மக்கள் கிடைத்ததைக் கையில் கொண்டு பொது இடங்களை நோக்கி சிதறி ஓடுகின்றனர். பல லட்சம் மக்கள் வீடுவாசல்களை இழந்து அகதிகளாக்கப்பட்டுள்ளனர். அகதிகளாக்கப்பட்டவர்கள் உணவு இன்றித் தவிப்பதுடன் நாளாந்தம் பட்டினியால், தொற்று நோய்களால் இறந்தவண்ணம் இருக்கின்றனர். பட்டினிதாங்காமல் பல குடும்பங்கள் நஞ்சருந்தி தற்கொலை செய்கின்றன. மருத்துவவசதியின்றி காயமுற்றோர், நோயுற்றோர், சிறுவர் முதல், கர்ப்பிணிப் பெண்கள் வரை செத்துமடிகின்றனர்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக இயக்க, ராணுவ ஊர்காவல்படை, இனவெறியர்களால், சாதாரண தமிழ், முஸ்லிம் மக்கள் படுகொலைசெய்யப்படுகின்றனர். அகதிகளின

www.tamilarangam.net



தேவாலயங்கள், மசூதிகள் எரிக்கப்படுகின்றன. தமிழ் முஸ்லிம் மக்கள் வழிபாட்டுத் தொழுகைகளில் ஈடுபடும்போது இனவெறிக் கொலைகாரர்களினால் வெட்டியும், அடித்தும் கொல்லப்படுகின்றனர். சின்னஞ்சிறு மழலைகள் மதிற் சுவர்களில் சிதறியடித்துக் கொல்லப்படுகின்றனர். மொத்தத்தில் தீவு நாட்டில் இனவெறி கோரத்தாண்டவம் ஆடுகிறது.

தீவு நாட்டின் இன்றைய அரசியல் மிக்கதொரு நெருக்கடிக்கும், இனப்படு கொலைகளுக்கும், 40 வருடங்களுக்கு மேற்பட்ட பாராளுமன்ற அரசியலில் மாறிமாறி பதவிகளுக்கு வந்த சிங்கள பேரினவாத அரசுகளின் தொடர்ச்சியான இனவாத நடவடிக்கைகளே பிரதான காரணியாகும். அதே வேளை சிறுபான்மை இனத்தவர்களிடையே மேலாதிக்கம் செலுத்திய குறுகிய இனவாதக் கட்சிகள் இயக்கங்கள் ஆகிய வற்றின் இனவாத நடவடிக்கைகளும் ஒரு காரணியே.

பேரினவாதம், குறுகிய இனவாதம் என்கின்ற நோய் பிரித்தானியரின் வருகையுடன் தோன்றி அவர்களின் வெளியேற்றத்துடன் நடைமுறையாகவும் பரவ ஆரம்பித்தது. இந்நோயை மக்கள் மத்தியில் பரப்பியது சிங்கள தமிழ் முதலாளித்துவ பாராளுமன்ற அரசியல் கட்சிகளே.

தமிழ், சிங்கள முதலாளித்துவ அரசியல் கட்சிகள் பாராளுமன்ற அரசியலில், தம் அரசியல் நலன்களை நிறைவேற்றும் பொருட்டு தம் இனத்தின் மத்தியிலுள்ள நலன்களை (அரசியல், பொருளாதார வரலாறுகளிலிருந்து அவற்றை உண்மைகளுடன்) பெருமை கொள்ளக் கூடிய வகையில் பேசவும் அதை மற்ற இனத்தின் நலன்களுக்கு மேலாக சுட்டவும், உணர்த்தவும் முற்பட்டனர். இதன்விளைவாக தமிழ்

சிங்கள மக்கள் மத்தியில் இனஉணர்வுகள் ஊட்டப்பட்டது. நாளடைவில் இவ் உணர்வுகள் மக்கள் மத்தியில் பகை உணர்வு கொள்ளும் வகையில் வளர்த்தெடுக்கப்பட்டு இனவாதமாகவும் அதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக இனவெறியாகவும் தோற்றம் பெற்றது. இவ் இனவெறியின் உச்சக்கட்ட கோரத்தாண்டவத்தை நம் நாடு அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழ் சிங்கள மக்களுக்கிடையில் இனவாத உணர்வுகளை விதைத்து அது இனவாத இனவெறியாக மாற்றம் பெற்றதற்கு குறுகிய இனவாத அரசியல் எப்பங்கை ஆற்றியது என்பதை எடுத்துக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையின் குறுகிய இனவாத அரசியலின் முதல் தமிழ் பிரதிநிதி ஜீ.ஜீ. பொன்னம்பலமும் அவரது காங்கிரஸ் கட்சியுமே. நிலவுடமையின் எச்ச சொச்சங்களையும் வடபகுதியின் சைவ-உயர்வர்க்கத்தின் உள் அடக்கத்துடனேயுமே தமிழ் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரதிபலிப்பே" 'தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா' என்ற கோஷம் அதனூடே வைக்கப்பட்ட ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையுமாகும். தமிழ்காங்கிரஸ் கட்சியை பொன்னம்பலம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என ஆரம்பித்தாலும் வடமாகாணத்தை மையமாகவைத்தே (ஜீ.ஜீ. உயிரோடு இருக்கும்வரை) அதன் அரசியல் மார்க்கம் அமைந்தது. 1965. பொதுத்தேர்தலில் கிழக்கு மாகாணத்திற்கும் வடபகுதியில் மன்னார் தொகுதிக்கும் கூட பிரதிநிதிகளை நிறுத்தாமல் மன்னார் தவிர்ந்த வட இலங்கை தமிழ் காங்கிரஸ் என தமிழரசுக்கட்சி இரண்டில் செய்யும் அளவிற்கு

www.tamilarangam.net



இறுகிய வட்டத்திற்குள்ளேயே தன்னை நிலைநிறுத்தியது.

1965 ல் யூ.என்.பி அரசிடம் தமிழரசுக்கட்சி தமிழ்ப்பல்கலைக்கழகம் கோரியபோது, காங்கிரஸ் தமிழ் மக்களுக்கு இந்துப் பல்கலைக்கழகம் வேண்டுமென்ற கோரிக்கையை விடுத்து. இச்சந்தர்ப்பத்தில் காங்கிரஸின் இந் நடவடிக்கையின் மூலம், தான் வடபகுதி சைவ உயர்வர்க்க பிரதிநிதியென்பதை தெளிவுபடுத்திக் காட்டியது. அத்துடன் இக்கோரிக்கையானது தமிழ் மக்கள் மத்தியிலிருந்து சாதி, மதரீதியில் குரோத உணர்வை பேணியவர்களுக்கும் பெருமை கொண்டவர்களுக்கும் கை கொடுத்து உதவியது.

ஐம்பதுக்கு ஐம்பது என்ற சம அந்தஸ்துக் கோரிக்கையை முன்வைத்த பொழுதும், மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்தும், அவர்களை நாடற்றவர்களாக்கும் சட்டங்களில் கை வைத்திட்டதன் மூலம் அதிலிருந்த அர்த்தபுஷ்டியே இல்லாமல் போய்விட்டது. சம அந்தஸ்தைக் கேட்டுக்கொண்டு தமிழ் மக்களின் ஒருபகுதியினரான மலையகமக்களின் சமாதிப் பங்குரிமையை இல்லாமல் செய்ததன் மூலம் மலையக மக்களுக்கும் வடகிழக்குத் தமிழ் மக்களுக்கும் இடையிலான குரோத உணர்வை வளர்க்க உதவியாக அமைந்தது.

யூ.என்.பி.யுடன் சேர்ந்தமைச்சு மந்திரிப்பதவியேற்றும், காலி மாநாட்டில் சிங்களம் மட்டும் அரசகரும மொழியென்ற கொள்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் பொன்னம்பலத்தின் தனிப்பெரும் அரசியல் ஆட்டம் காணத் தொடங்கியது.

மலையகமக்களை ஜி.ஜி. காட்டிக் கொடுத்துவிட்டார் என்ற குற்றச்சாட்டுடன் தமிழ்காங்கிரஸ் இலிருந்து பிரிந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்தார்.

www.tamilarangam.net



தமிழரசுக்கட்சி சமஷ்டி என்ற கொள்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட பொழுதிலும் அது தமிழர் ஆட்சியை நிறுவுவதற்கான ஒரு பிரிவினைக்கட்சியே என்ற பிரசாரம், தென்னிலங்கையில் கே.எம்.பி. இராஜரத்தினம் போன்ற இன வெறியர்களால் முடுக்கி விடப்பட்டது. இச்சந்தர்ப்பத்தில் தமிழரசுக்கட்சி சமஷ்டி பற்றி சிங்கள மக்களுக்கு எடுத்துச் சொல்ல நடைமுறைச்சாத்தியமான முயற்சிகள் எதுவுமே எடுக்கவில்லை. அல்லது அக்கொள்கையை ஆதரித்த இடதுசாரிகளுடன் இணைந்தாவது செயற்படவோ முற்படவில்லை.

தமிழரசுக்கட்சி தமிழ்க்காங்கிரஸைப் பார்க்க ஜனரஞ்சகமான இயல்புடைய அதேசமயம், பிரித்தானிய காலனித்துவ அரசுமன்னர்களுக்கு விசுவாச உணர்வுடையதாகவும் இருந்து செயற்பட்டது. (பிரித்தானிய கடற்படைத்தளம், விமானப்படைத்தளம் ஆகியவற்றை அகற்றுவதிலும் அந்நிய எண்ணெய்க் கம்பனிகளை தேசியமயமாக்கும் நடவடிக்கைகளை பண்டாரநாயக்கா அரசு மேற்கொண்டபோது கண்மூடித்தனமாக எதிர்த்தது) மொத்தத்தில் பெரும்பான்மைத் தமிழ் மக்களின் அபிலாசைகளை பிரதிநிதித்துவப் படுத்துவது போல் நடித்தது.

தனிச் சிங்களச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சினையை முழுத்தமிழ் மக்களின் பிரச்சினையாக காட்டி அதற்கேற்றவாறு பாராளுமன்ற அரசியல் தக்க வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இக்காலகட்டத்தில் பரவலாய் எழுந்த சட்டத்தரணிகளையும் இனவாத உணர்வுகளைத் தட்டியெழுப்பும் (அமிர் போன்ற) வாய்ச்சொல் வீரர்களையும் உருவாக்கியது.

www.tamilarangam.net

*Nur Für Freundkreis*

## சந்தா விபரம்

தனிப்பிரதி - 3 SFr

சுவிஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு

ஒரு வருடம் : 20 SFr

ஆறு மாதம் : 10 SFr

(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்!

• ஆ-ர் குழு •

## முக்கிய அறிவித்தல்

சந்தா முடிவடைவந்தவர்கள், உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

வங்கிக் கணக்கு இல:

SPAR KONTO : 0094- 157146- 60- 1

வங்கி முகவரி :

"BüCHER VERKAUF"
SCHWIZERISCHE KREDITANSTALT

SWITZERLAND

சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்டதையடுத்து அதை பேரினவாத அரசின் நடவடிக்கையாக காட்டாமல் முழுச்சிங்கள மக்களின் நடவடிக்கையாகவே தமிழ் மக்களுக்கு காட்டினார்கள். சிங்களம் மட்டும் சட்டத்தால் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட ஆத்திரத்தை திட்டமிட்ட முறையில் ஒழுங்குபடுத்தி அரசிற்கெதிராக நியாயதிற்கான போராட்டமாகக் கூட முன்னெடுக்க முன்வரவில்லை. மாறாக இரு இனங்கள் மத்தியில் பகை உணர்வுகளை வளர்ப்பதும் வகையான இனவுணர்வுப் பேச்சுக்களையே மேற்கொண்டனர்.

[அடுத்த இதழில் தொடரும்]

- குகன் -

www.tamilarangam.net

MANITHAM
POSTFACH - 12
3000 BERN - 11
SWITZERLAND

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்